# DISTRICT HISTORY

# SALEM

ஜில்லா சரித்திரம்

# சேலம்

சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா

P. V. ஜகதீச ஐயரால்

எழுதப்பட்டு

சென்னை சட்டசபைத் தலைவர்

கனம் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை

அவர்கள் முகவுரையுடன்

கூடியது

[படங்களுடன்]

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1926

*All rights reserved*] [விலை 5 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

# FOREWORD

I cannot commend too highly the educational value of this series of *gazetteers* in Tamil. I have been long wishing that the people of every town and village should have ready to hand a complete guide to objects of local interest and particularly to local antiquarian remains; and this series by a competent archæologist like Mr. P. V. Jagadisa Aiyar will go far to fulfil this desideratum.

*Fort St. George,*
19-10-1924

L. D. SAWMIKANNU

# AUTHOR'S PREFACE

Love for one's own country and institutions is a virtue highly essential in all its citizens for its prosperity and well-being. Every attempt should be made therefore to cherish and cultivate this virtue by *one and all.* The study of the history of one's own country in general, and one's own district in particular, should perforce bring about the desired result in this direction. Here we may refer to the statement in the *Report of the fifteenth Provincial Educational Conference* of 1923.

> 'It is one of the fundamental principles of pedagogy that the History and Geography to be taught to the young shoald start with and be based on the study of the History and Geography of the district or region in which the pupil lives and be correlated to his actual daily experience.'

It is the study of the History of our ancient times and ancient rulers that should rouse in our youths a feeling of reverence and esteem for our ancient rulers and their works and institutions.

Our youths, nay our countrymen and countrywomen too, seem to be under the impression that our land, unlike others, cannot boast of a history from the records of our rulers and historians. This is perhaps due to the fact that books on the history of our land put into their hands are those containing materials culled by foreigners. Here we may point out the fact that in our country historical facts and events of ancient days and

ancient rulers have been carefully preserved *imperishably* and *unalterably* in Epigraphical records on temple walls, copper-plate grants and so on.

Our present Government have collected and published in the *Gazetteers* of the districts and the *Reports of the Epigraphical* and *Archaeological departments* a good deal of valuable historical information relating to each district, especially of ancient days and ancient rulers. From out of the facts based on these research works, a series of booklets containing summaries of historical events and other particulars of the various districts, is issued in vernaculars, for the use of our school-going boys and girls and this volume is one of them.

The plan adopted in compiling these booklets is that of giving particulars relating to the situation, people etc., of each district in the general introduction, the political history proper from the beginning up to the occupation by the British in chapter I, and the Gazetteer relating to the historically important places in chapter II. In the case of the Madras district alone, the history relating to the acquisition by the English of the various parts of the presidency is given in the introduction, the history of the city together with the founding of Fort St. George in chapter I, and the various institutions useful to the people, maintained by Government and by private bodies in chapter II.

June 23, 1924 P. V. JAGADISA AYYAR

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| | பூர்வபீடிகை | 1 |
| I. | தேச சரித்திரம் | 21 |
| II. | விசேஷ இடங்கள் | 41 |


சேலம் ஜில்லா
மேல்பரப்பு
ஸ்கேல் 1" = 16 மைல்
76°30'
77°0'
77°30'
78°0'
12°0'
11°30'
மைசூர் ராஜ்ஜியம்
வட ஆற்காடு ஜில்லா
மேலகிரி
வாணியாறு


11° 0'
10° 30'
76°30'
77° 0'
77°30'
78° 0'
ஜில்லா
3000 - அடி
1200 - அடி
600 - அடி
கடல் மட்டம்

# சேலம் ஜில்லா

## பூர்வ பீடிகை

### (அமைப்பு முதலிய விவரங்கள்)

சேலம் ஜில்லா வடக்கில் மைசூர் ராச்சியத்தாலும், மேற்கில் இதைக் கோயம்புத்தூர் ஜில்லாவினின்றும் பிரிக்கும் காவேரி நதியாலும், தெற்கில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவினலும், கிழக்கில் வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களாலும் சூழப்பட்டுளது. இந்த ஜில்லா இப்போது பத்து தாலூகாக்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) ஹோசூர்
(2) கிருஷ்ணகிரி
(3) தர்மபுரி
(4) ஊத்தங்கரை
(5) திருச்செங்கோடு
(6) ஓமலூர்
(7) சேலம்
(8) ஆத்தூர்
(9) நாமக்கல்
(10) ராசீபுரம்.

இந்த ஜில்லா 7225 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ளதுடன், 1097 கிராமங்கடங்கியதும், 2219848 ஜனத்தொகையயுமுடையது.

இயற்கையாக இந்த ஜில்லா மூன்று பிராந்தியங்களாகப் பிரிவுபட்டிருக்கிறது. இவைகளுக்குள் யாதொரு சம்பந்தமும் ஏற்பட்டிருக்கவில்லை. இம்மூன்று பிரிவுகள் (1) பாலகாட் (2) பாராமஹால் (3) தலகாட் என்ற பெயர் வாய்ந்துள்ளவை.

இவைகளுள் பாலகாட் என்றது மைசூர் பீடபூமியின் ஒரு பாகம். இது இயற்கைத் தோற்றத்தில் மைசூரையே ஒத்திருக்கிறது. இதற்கு வடக்கிலும் கிழக்கிலும் அங்கங்கு பாறைகள் பதிந்து சுவல்ப காடுகளுடன் கூடிய மேடுபள்ளமான பீடபூமிப் பிராந்திய முளது. இதற்குத் தெற்கிலும் மேற்கிலும் அடர்ந்த காடுகளிருக்கின்றன. சராசரி உயரம் சமுத்திர மட்டத்துக்குமேல் 3000 அடி. ஜில்லாவின் இந்த பாகம் 1799-வது வருஷம் கொடுக்கப்பட்டபொழுது இப்பொழுது ஹோசூர் தாலூகாவென வழங்கப்பட்டுவரும் பாகத்திற்கு பாலகாட் என்ற பெயர் ஏற்பட்டிருந்தது. வாஸ்தவத்தில் இது சரி யல்ல. ஏனெனில் பீடபூமி நாடென்ற பொருள்தரும் இந்த பாலகாட் என்ற பிராந்தியம் கிருஷ்ணகிரி தாலூக்காவின் பெரும்பாகம் அடங்கியுள்ளதாக விருக்க ஹோசூர் தாலூக்காவில் பாதி சுமார் மலைத்தொடர்ச்சிக்குக் கீழாக விருக்கக் காணலாம்.

(2) பாரமஹால் என்ற பிரதேசம் மைசூர் பீடபூமிக்கும் சமவெளிப் பிராந்தியங்களுக்கும் இடையிலுள்ள பெரிய நதிகள் வாய்ந்துள்ள இடம். சாதாரணமாய் இதன் உயரம் சமுத்திர மட்டத்திற்குமேல் 1300 அடி. பொதுவாக இதில் தர்மபுரி தாலூகா, ஊத்தங்கரைத் தாலூகா, கிருஷ்ணகிரியின் பெரும்பாகம், ஹோசூரின் சில பாகங்கள் இவை அடங்கியுள்ளன. இது மேற்கிலும், வடக்கிலும்

பைஹூர் பீடபூமியை எல்லையாகக்கொண்டிருக்கிறது. தெற்கிலும், கிழக்கிலும் ஏற்பட்டுள்ள இதன் எல்லை ஜவாடி, தீர்த்தமலை, சித்தேரி, சேர்வராயன், மனுகொண்ட மலை முதலிய குன்றுத் தொடர்களுடன் கூடியுள்ள தொடர்ச்சி மலையின் இரண்டாவது வரிசை. தென்மேற்கில் பெண்ணுகரம், ஓமலூர் இவைகளுக்கிடையிலுள்ள பிராந்தியம். "பாரமஹால்" என்ற பதத்திற்குப் பன்னிரண்டு அரண்மனைகளென்றும், பன்னிரண்டு ஜில்லாக்கள் என்றும் பொருள் ஏற்படுகிறது. ஜகதேவராயனுக்குப் பன்னிரண்டு குமாரர்களிருந்ததால் அவர்களை அவர் பன்னிரண்டு பாகங்களிலும் ஆளும்படி செய்திருந்தார் என்ற வதந்தியிலிருந்து பிந்திய பன்னிரண்டு ஜில்லாக்கள் என்ற அருத்தமே போலும்.

(3) தலகாட் அதன் பேருக்கேற்றபடி மலைத்தொடருக்குக் கீழாகவுள்ள நாடேயாகும். தோற்றத்தில் இது பக்கத்திலிருக்கும் திரிச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களையே ஒத்திருக்கிறது. காவேரி, வெள்ளாறு நதிகளின் பிராந்தியங்களைப் பிரிக்கும் பாகமே இந்தத் தலகாட்டை இரு பாகங்களாகப் பிரிக்கின்றது. கீழண்டை பாகம் ஆத்தூர் தாலூக்காவுடனும் மேற்கு பாகம் சேலம், ஓமலூர், திருச்செங்கோடு தாலூக்காக்களுடனும் பொருந்தியுள்ளது.

நதிகளின் அமைப்பை மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம். (1) காவேரி நதி பாசானம். இதன் ஜலம் பாயுமிடத்தில் உள்ளன. ஹோசூரின் தென்பாகம் சநத்குமார நதியும், தொப்பூர் நதியும் ஜலத்தைபெறும் தர்மபுரி; சரபங்கநதி, திருமணிமுத்தாறு இவைகள் ஜலத்தைப் பெறும் சேலம், ஓமலூர், திருச்செங்கோடு தாலூக்காக்கள் முதலியன (2) வெள்ளாறு பாசானம். இதில் அடங்கியுள்ளன அ... ...

தாலூகாவின் வசிஷ்ட நதி, சுவேத நதிகளும், ஜில்லாவின் எல்லைக்குக் கிழக்கில் இரண்டு நதிகள் சேர்ந்து பரங்கிப் பேட்டையில் சமுத்திர சங்கமமாகும் தென் ஆற்காடு ஜில்லா விலுள்ள வெள்ளாறும். (3) பெண்ணையாறு பாசனம். இந்நதிக்கு ஜலம் பாலகாட்டின் வடபாகமும் தர்மபுரியின் தென் மேற்குமூலை நீங்கலாக பாரமஹாலும் கொடுக்கின் றன. இந்நதியின் உபநதிகள் மார்க்கண்ட நதி, கம்பய நல்லூர் நதி, பாம்பாறு, வாணியாறு முதலியன

இந்த ஜில்லாவின் மேற்கு ஓரமாகக் காவேரிநதி ஓடு கின்றது. அப்படி ஓடுகையில் இது திடீரென்று நேர்கோண மாகத்திரும்பி நான்கு இடங்களில் செல்லுகிறது. முதலில் பிரசித்திபெற்ற ஹொகனகல் நீர்வீழ்ச்சிக்குக் கீழ் ஸநத் குமாரநதி இதில் வந்து கலக்குமிடத்தில் அது அப்படித் திரும்பிச் செல்வது. இரண்டாவது கொள்ளேகாலத்துப் பாலாறு, நீர்வீழ்ச்சிகளுக்குப் பதினன்கு மைல்களுக்கப் புறம் இதில் வந்து கலக்கும்போது அப்படிச் செல்வது. மூன்றாவது சோழப்பாடியி னருகில் தொப்பூர் நதி வந்து கலக்குமிடத்தில் அப்படிச் செல்வது. நான்காவது பவானி யில் பவானி நதிவந்து கலக்குமிடத்தில் அப்படிச் செல்வது. அப்படித் திரும்பும் ஒவ்வொரு இடத்திலும் இந்நதி தான் சென்றுவந்த வழியை விட்டு விட்டுத் தனது உபநதிகளின் மார்க்கத்தை அனுசரிக்கப் புகுந்துளது. இந்த ஜில்லாவுக் குள் இக்காவேரி நதியை எங்குமே மார்ச்சு மாதத்திலும், ஏப்பிரல் மாத ஆரம்பத்திலும், மே மாதக் கடைசியிலும், ஜூன் மாதத்திலும் சாதாரணமாகக் கடந்துசெல்லலாம். ஆனல் மற்ற நாட்களில் அப்படிச் செய்ய இயலாது. பிர வாக காலங்களில் இந்நதியின் ஜலம் பத்துப் பதினைந்து [illegible]ள்வரை கூடப்பெருகுவது வழக்கம். இதன்மேல்

பாகங்களில் சிற்சில விடங்களில் முப்பது முதல் அறுபதடி வரைகூட ஆழம் வாய்ந்துள்ள மடுக்கள் ஏற்பட்டிருப்பதுண்டு. நதி வளையுமிடங்களில் ஏற்படும் மடுக்கள் வருஷா வருஷம் ஸ்தானங்கள் மாறுவதுபோல உறுதியான பாறைகள் வாய்ந்துள்ள இடங்களில் ஏற்பட்டுள்ள மடுக்கள் மாறுவதில்லை. இந்த ஜில்லாவின் ஓரங்களில் இந்நதியின் ஜலம் ஓடுமிடங்கள் ஆழமாகவும் பாறைகள் வாய்ந்தும் இருக்கும் காரணம்பற்றி அப்பாகங்களில் அது விவசாயத்திற்கு உபயோகிக்கப்பட முடிவதில்லை.

இதன் உபநதிகளுள் சிற்றாறு என்ற ஸநத்குமார நதி தளியென்னுமிடத்திற் கருகிலுள்ள தேவரபெட்டா என்ற சுனையில் உற்பத்தியாகிறது. இச்சுனை, ஸநத்குமாரர் என்ற மஹரிஷியால் ஏற்படுத்தப்பட்டதாம். தளியின் வழியாக ஓடிப் பிறகு இது கிழக்கு முகமாகத் திரும்பிக் கேலமங்கலத்திற்கு ஒரு மைல் தூரத்தில் வருகையில் ஹுதேதுர்க்கம் என்ற பாறைக்கும்பலால் தடுத்து வேகம் குறைக்கப்படுகிறது. அங்கிருந்து அது தெற்காகப் பிக்கிலிக் குன்றுகள்வரை சென்று மறுபடியும் மேற்குப் பக்கமாகத் திரும்புகிறது. இது காவேரி நதியுடன் ஹொகனக்கல் நீர்வீழ்ச்சிக்குக் கீழ் கொஞ்ச தூரத்தில் வந்து கலக்கிறது. தொப்பூர்நதியென்ற உபநதிக்கு வேப்பாதியாறு என்ற இன்னொரு பெயரும் உண்டு. இது சேர்வராய மலையில் முலுவி என்ற விடத்திற் கருகில் உற்பத்தியாகிறது. அங்கிருந்து இது மல்லாபுரம்தொடர்ச்சி மலைப்பாதை ஏற்பட்டுள்ள கணவாயின் வழியாக வடகிழக்காக ஓடிச்செல்கிறது. இந்தக் கணவாயில்தான் இந்நதியின் பெயருக்குக் காரணபூதமாகிய வேப்பாதியென்ற சிறிய கிராமமிருக்கிறது. மல்லாபுரமென்னுமிடத்திற் கருகில் இது நேர்மேற்காகத் திரும்

பிப்போய்த் தொப்பூரைக்கடந்து சோழப்பாடி என்னுமிடத்தில் காவிரி நதியுடன் கலக்கிறது.

சரபங்க நதி யென்ற மூன்றாவது உபநதிக்கு அதன் பெயர் அதன் உற்பத்தி ஸ்தானங்கள் ஒன்றில் தவம் செய்து கொண்டிருந்த ரிஷி சரபங்கர் என்றவரிடமிருந்து ஏற்பட்டதாம். ஓமலூர் என்னு மிடத்தில் கிழக்கு நதி மேற்கு நதி என்ற பெயர்கள் வாய்ந்துள்ள இரு நதிகள் சேர்ந்து இது ஏற்பட்டுள்ளது. இவைகளுள் சாதாரணமாய்ப் பெரியாறு என்ற கிழக்கு நதி ஏர்க்காடு என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது. ஏர்க்காடு ஏரியை விட்டுக் கிளம்பினதும் கிளியூர் நீர்வீழ்ச்சியாக விழுந்து பிறகு ஓமலூரை நோக்கி மேற்கு நோக்கித் திரும்பிச் செல்கிறது. மேலே சொன்ன இரண்டாவது நதிக்குப் பற்பல விடங்களில் பட்டிபாதி நதி, பறயன்குழிநதி, கூட்டாறு, மலைத்தொடர்ச்சி நதி என்ற பற்பல பெயர்கள் உண்டு. அது சேர்வராயன் மலையின் மேலண்டைச் சரிவுகளில் உற்பத்தியாகிக் காட்யாம்பட்டித் தொடர்ச்சிக் கணவாயின் வழியாக ஓடுகிறது. இருப்புப் பாதையைக் கடந்ததும் அது தெற்கு நோக்கித் திரும்பி அதே திசையில் அது பெரியாற்றுடன் கலக்கும்வரை செல்கிறது. இவ்விரு நதிகள் சேர்ந்து ஏற்பட்டுள்ள நதி திருச்செங்கோட்டில் இடப்பாதிக்கருகிலுள்ள அநேகம் பெரிய குளங்களை நிரப்பிவிட்டு காவேரிப்பட்டிக்கருகில் காவேரி நதியுடன் கலக்கிறது.

சிற்சில சமயங்களில் முத்துவிளையும் காரணம் பற்றித் திருமணிமுத்தாறு என்ற பெயர் வாய்ந்துள்ள சேலம் நதி என்ற ஆறு மஞ்சவாடிக் கணவாய்க்கருகில் உற்பத்தியாகும் இருநதிகள் சேர்ந்து ஏற்பட்டுளது. அந்நதிகளும் சேலத்திற்கு மூன்று மைல் தூரத்தில் மேல்பக்கமாகச்

சேர்கின்றன. சேலத்திலிருந்தும் அது நேர் தெற்காகச் சென்று நாமக்கல் தாலூக்காவில் காவேரி நதியுடன் கலக்கிறது. இந்த திருமணிமுத்தாறின் முக்கிய உபநதி வ்லூர் நதி. அது ஜலத்தைப் பெறுவது போதமலைத் தென் சரிவுகளிலிருந்தும், ராசிபுரம் பிராந்தியங்களி லிருந்து, கஞ்சமலையி லிருந்துவரும் ஒரு சிற்ருறு பொன்ஞறென அழைக்கப்படும். அது மல்லசமுத்திரக் குளத்தை நிரப்பிவிட்டுச் சேலம் நதியின் கீழ்ப் பாகத்தில் நான்கு மைல் தூரத்தில் அத்துடன்வந்து கலக்கிறது.

கல்ராயன், கொல்லிமலை, பச்சைமலைப் பிராந்தியங்களுக் கிடையிலுள்ள நாடு வசிஷ்ட நதி, சுவேத நதியென்ற இருநதிகளுக்கு ஜலத்தைப் பெறுகிறது. இந்த இரு நதிகள் ஓடும் பிராந்தியங்களைப் பிரிப்பது பைத்தூர்க் குன்றுகள். சுவேத நதியென்ற வடமொழிக்குத் தென்மொழியில் வெள்ளாறு என்ற அருத்தம். இவ்விரு நதிகளையுமே வெள்ளாறென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்த ஜில்லாவில் ஓடும் எந்த நதியையும்விட அதிகமாகக் குழம்பி சிகப்பு நிறம் வாய்ந்துமுள்ள நீருடன் பிரவாக காலங்களில் ஓடும் இந்நதிகளுக்கு எக்காரணம் பற்றிச் சுவேதநதி அல்லது வெள்ளாறு என்ற பெயர் இடப்பட்டதோ தெரியவில்லை. ஒரு சமயம் பஞ்சபாண்டவர்களுள் ஒருவனை அர்ச்சுனன் யாத்திரை செய்துகொண்டிருக்கையில் இங்கு வந்து பூசைசெய்ய விரும்பிப்பார்க்க எங்கும் ஜல மிராததுகண்டு தனது அம்பினுல் பாறையில் ஓரிடத்தில் தோண்டினுன். உடனே ஜலம் குமிழியிட்டுக் கொண்டு கிளம்பிவந்து நதியாக ஓடத்தலைப்பட்டது! அர்ச்சுனனுக்குச் சுவேதவாகனன் என்ற பெயரும் உண்டு. ஆதலால் அப்பெயரை ஒட்டி இந்நதிக்குச் சுவேத நதி

யென்ற பெயர் இடப்பட்டிருக்க வேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். பேலூருக் கருகில் வசிஷ்டர் ரிஷி யாகம் செய்தார். அவரது பெயரை இட்டு மற்ற நதியை வசிஷ்ட நதியென்று கூப்பிட்டார்களாம். பேலூர் கிராமத்திற்கு வடக்கில் சில வெண்பாறைகள் காணப்படுகின்றன. அவைகள் வசிஷ்ட மஹாரிஷி செய்த யாகத்தில் ஏற்பட்டுச் சேர்ந்த சாம்பலே இவைகளிலிருந்து துண்டுகளைக் கொண்டுபோய்ச் சைவர்கள் அவைகளைப் பொடிசெய்து விபூதியாகத் தரிக்கிறார்கள். போராறு என்ற இன்னொரு பெயரும் வாய்ந்துள்ள இந்த வசிஷ்ட நதி அறநூத்துமலையில் உற்பத்தியாகி வடக்குமுகமாக எழுபது மைல் தூரம் ஓடுகிறது. பிறகு அது தெற்கு நோக்கித் திரும்பிக் கீரிப்பட்டிப் பள்ளத்தாக்கின் வழியே ஓடிப் பேலூருக்கருகில் சமவெளிப் பிராந்தியத்தில் பிரவேசிக்கிறது. பேலூருக் கிரண்டு மைல்களுகப்பால், கோட்டைப்பட்டிக் கணவாய்த் தலைப்பிலிருந்து ஓடிவரும் அம்மாபாளையம் நதியின் ஜலத்தையும் கல்ராயன் பிராந்திய ஜலத்தையும் பெற்றுக் கொண்டுவரும் கரியகோவில் நதி இதில் வந்து கலக்கிறது. சேலம் ஆத்தூர் ரஸ்தாவை அணுகும்போது இந்த வசிஷ்ட நதி கிழக்குநோக்கி வளைந்து சென்று கிருஷ்ணபுரத்துக் கருகில் தெற்கிலிருந்துவரும் சிங்காபுரம் நதியின் ஜலத்தைப் பெற்றுக்கொள்ளுகிறது. ஆத்தூருக்கு மேற்கில் மல்லிக்கரை என்ற இடத்திலிருந்து வரும் மெக்கப்பள்ளி நதியென்ற மூன்றாவது உபநதி இத்துடன் வந்து கலக்கிறது. வசிஷ்ட நதி இந்த ஜில்லாவின் சிறந்த நிலங்களின் சில பாகங்களைச் செழிக்கச் செய்வதுடன் அனேகம் அணைக்கட்டுகளையும் பெற்றிருக்கிறது. இதில் வெள்ளம் வருவது தவறுவதே இல்லை.

கொல்லிமலை, பச்சைமலைப் பிராந்தியங்களின் ஜலம் சுவேத நதியில் விழுகிறது. இதுவும் நிலங்களைச் செழுமை யாக்குவதிலும், பிரவாகம் தவறாமல் பெறுவதிலும் வசிஷ்ட நதியை ஒத்திருக்கிறதுபோலும். இதற்கு யாதொரு முக் கியமான உபநதிகளும் இல்லை.

பெண்ணையாறு மைசூரில் நந்தி துர்க்கத்துக்கருகில் உற்பத்தியாகி அங்கு பிஞகினி என்ற பெயருடன் ஓடிவரு கிறது. சிவபிரானது தநுஸாகிய பிஞகம் என்ற பதத்தி லிருந்து இதன் பெயர் ஏற்பட்டுளது. ஒரு சமயத்தில் பெருத்த ஜலகஷ்டம் ஏற்படச் சிவபிரான் பார்வதி தேவி யாரை நந்தி துர்க்கத்திலிருந்து ஒரு நதியாகச் செல்லுமாறு கூற அவளும் அவ்வாறே இரு திசைகளில் வடபிஞகினி, தென் பிஞகினி என்ற இரு நதிகளாக ஓடினள். இந்நதி கள் வளைந்தோடும் தோற்றம் ஒரு வில்லைப்போல் காணும் காரணம்பற்றி இப்பெயர்களை அடைந்திருக்க வேண்டும். பார்வதி தேவியார் அவதரித்து ஓடிய நதியெனக் கருதப் படும் பெண்ணையாறு மிகப் பரிசுத்தமான நதி. கங்கை நதியும்கூட அதில் ஸ்நானம் செய்யும் பாபிகளின் பாபத் தைத் தன்னிடமிருந்து அகற்றிக்கொள்ள வருஷத்தில் ஐந்துநாள் இந்நதியில் ஸ்நானம் செய்துபோகிறாள் என்பது ஐதீகம்.

இப்பெண்ணையாறு பாகலூருக்கு வடமேற்கில் மூன்று மைல் தூரத்தில் தென் கிழக்குத் திசையில் ஹோசூர் தாலூக்காவில் பிரவேசிக்கிறது. மாலூர் ரஸ்தாவைக் கடந்ததும் அது தெற்கு நோக்கிச் சூலகிரி ரஸ்தாவைக்கடக் கும் வரையில் ஓர் ஒழுங்கின்றி ஓடுகிறது. இதன் நான்கு உபநதிகளுள் சின்னாறு என்ற மார்க்கண்ட நதி மைசூர்ப் பீடபூமியிலிருந்து நேர் தெற்காக தீர்த்தம், வேப்பனபள்

ளிப் பள்ளத்தாக்குகளின் வழியாக ஓடி பெண்ணையாறு பாரமஹாலில் தாழ்வான பிராந்தியத்தில் பிரவேசித்த வுடன் அதில் வந்து சேர்கிறது. தர்மபுரி தாலூக்காவின் பெரும்பாகத்திய ஜலத்தைப் பெற்றுவரும் கம்பயநல்லூர் நதி, பிக்கிலிக் குன்றுகள் பாலக்கோடு நாடுகளைச் சூழ்ந் துள்ள பிராந்தியம் இவைகளின் ஜலத்தைப்பெற்றுவரும் புலஹல்லி நதி, வட்டலமலையின் தென் சரிவுகளின் ஜலத் தைப்பெற்றுவரும் தர்மபுரி நதி, இவைகளை உபநதிகளாகப் பெற்றுள்ளது.

பாம்பாறு திருப்பத்தூர்த் தாலூக்காவின் ஜவாடி ஏலகிரிப் பிராந்தியங்களில் உற்பத்தியாகி, திருப்பத்தூரி லிருந்து நேராகத் தென் கிழக்காக ஊத்தங்கரை வழியாக ஓடிப் பெண்ணையாற்றில் கலக்கிறது.

வாணியாறு ஏர்க்காட்டுக்கருகில் சேர்வராயன்மலையில் உற்பத்தியாகிறது. இது வெங்கடசமுத்திரம் என்னுமிடத் தில் சமவெளியை அணுகுகிறது. பிறகு இது ரஸ்தாவைக் கடந்துசென்று ஹரூரைக் கடந்து பாம்பாறு பெண்ணை யாறுடன் கலக்குமிடத்திற்குக் கொஞ்சம் கீழ்ப்பாகத்தில் பெண்ணையாற்றுடன் கலக்கிறது.

சேலம் ஜில்லாவிற்கு அழகைத் தருவது இதில் ஏற்பட்டுள்ள குன்றுகள். பாலகாட் பீடபூமியில் விசேஷ மானது ஸநத்குமார நதி உற்பத்தியாகும் தேவரபெட்டா என்ற சிகரம் ஹோசூரில் பகோடாக் குன்று. சமவெளி களிலிருந்துவரும் சத்துருக்களைத் தடுக்க ஏற்பட்டுள்ள மலைக்கோட்டைகளில் முக்கியமானவைகள் (1) சூலகிரி (2) தியாரண துர்க்கம் (3) அஞ்செட்டி துர்க்கம் (4) முனேசு வரகொண்டா (5) நீலகிரி (6) ஹுடே துர்க்கம் முதலியன.

ஸநத்குமார நதி, காவேரி நதி இவைகளுக்கிடையி லுள்ள பிராந்தியம் மேலகிரிக் குன்றுகள். அஞ்செட்டிப் பள்ளத்தாக்கு இரண்டு நதிகளின் சங்கமத்தால் ஏற்பட்டுள்ளது. அவைகளில் ஒன்று சாலிவாரம் பீடபூமியின் ஜலத்தைப் பெற்றுவருகிறது. மற்றது ஜவுலகிரிக் கருகில் உற்பத்தி யாகிறது. நடராஜபாளேயம் என்ற பிராந்தியம் அஞ்செட்டிப் பிராந்தியத்தைவிடச் சிறிது. உரிகம் பிராந்தியம் ஆறு மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் வாய்ந்துள்ள சமமான பள்ளத்தாக்கு. இப்பள்ளத்தாக்கின் தலப்பில் சமுத்திர மட்டத்திற்கு 1960 அடி உயரத்தில் உரிகம் என்ற கிராமம் ஏற்பட்டுளது. இரண்டு மைலுக்குத் தெற்கில் கொட்டிவூர் என்னுமிடம் சமுத்திர மட்டத்திற்கு 1870 அடி உயரத்தில் உள்ளது. குட்டிராயன் என்னுமிடத்திற்கு அய்யூர் கிராமத்திலிருந்து சுளுவாகப் போய்ச் சேரமுடியும். அங்கு காட்டில் தங்குவதற்காகக் கட்டடம் ஏற்படுத்தப்பட்டுளது. அழகிய மூங்கில் காடுகள் இங்குண்டு. பிக்கிலிக் குன்றுகள், ஸநத்குமார நதியை மேற்குப் பக்கம் திருப்பிவிடுகின்றன. இக்குன்றுகளின் தடங்கல் ஏற்பட்டிராவிடில் ஸநத்குமார நதி காவேரி நதியில் சங்கமமாகாமல், பெண்ணேயாற்றில் சங்கமமாகும். இந்த மேல் தொடர்ச்சிப் பிராந்தியத்தின் மற்றைய பாகங்கள், அங்குசகிரிக்கும்பல், மஹாராஜகதை, பாரமஹால் தூர்க்கங்கள் முதலியன. கீழ்த் தொடர்ச்சிப் பிராந்தியத்தில் அடங்கியுள்ளன பெரும்பாலே, மனுகொண்டா, வட்டலமலே, சேர்வராயன்மலே, கவரமலேக் கும்பல், தென் ஆந்தேமலே, கோட்டைப் பட்டித்தும்பல் கணவாய், கல்ராயன், தலேக்காட்டுக் குன்றுகள், கொல்லிமலே, பச்சைமலே, போதமலே, ஜெருகுதேன்மலே, சீதாமலே, கஞ்சமலே, கோடுமலே முதலிய பிராந்தியங்கள்.

மழை பெய்வதைப்பற்றிக் கணக்கெடுக்கச் சர்க்காரால் பற்பல இடங்களில் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த ஜில்லா மலைப் பிராந்தியமான காரணம்பற்றி மழைபெய்வது பல விடங்களில் பல விதமாக ஏற்பட்டுளது. ஓரிடத்தில் பலமான மழைபொழிய அதற்கு வெகு சமீபத்தில் மழையே பெய்யாமலிருப்பது இந்த ஜில்லாவில் ஸஹஜம். ஏர்க்காட்டில்தான் அதிக மழைபொழிவது. சேலத்தில் அதற்கடுத்து அதிக மழைபொழிகிறது. திருச்செங்கோடு, சங்கரி தூர்க்கம் இவ்விடங்களில் மழை குறைவு. அதிக ஈரம் வாய்ந்துள்ள தாலூக்கா ஆத்தூர். அதிகம் வரண்ட தாலூக்கா திருச்செங்கோடு. வழக்கமாய் ஏப்பிரல் மாதக் கடைசியில் மழை துவக்கி மே மாதத்தில் அதிகமாகப் பெய்கிறது. ஜூன் ஜூலை மாதங்களில் ஒழுங்கற்று மழைபொழிவது வழக்கம். இரண்டு பருவக்காற்றுகளாலும் ஏற்படும் மழைகளில் அனேகமாக எல்லாம் ஆகஸ்டு, அக்டோபர் இம்மாதங்களுக்கிடையில்தான் ஏற்படுவது. சில சமயங்களில் சேலத்தில் ஆலங்கட்டிமழை பெய்வதுண்டு.

சீதோஷ்ண நிலைமையாவது உலர்ந்துள்ள ஆகாசமும், குளிர்ச்சிபொருந்தியுள்ள இராக்காலங்களும், தென் மேற்குப் பருவக்காற்று மேற்குக் கரையில் துடங்கினதும் ஜூன் மாதம் முதல் உஷ்ணம் குறைந்துகொண்டு வருவதும். இந்த ஜில்லாவின் சீதோஷ்ண நிலைமையை மற்றக் கிழக்குத் தெற்கு ஜில்லாக்களின் சீதோஷ்ண நிலைமையைக் காட்டிலும் இன்பமாகச் செய்கின்றன. பூமி செம்மண் நிலம், கருமண் நிலம் என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கக் காணலாம். இந்த ஜில்லாவில் இரும்புக்கனிகள் ஏராளம். கற்சட்டிகள் செய்யத் தகுந்த ஒரு வித மாக்கல் இந்த ஜில்லாவில் அனேகவிடங்களில் அகப்படுகிறது. அப்

படி அகப்படுமிடங்களில் முக்கியமானவை ஆத்தூர் தாலூக்காவில் அயில்பட்டி மல்லிக்கரை ரஸ்தாவுக்குத் தெற்கிலுள்ள ஈசுவரமலையும், ஓமலூர் தாலூக்காவில் தாரமங்கலம் நங்கவல்லி ரஸ்தாவுக்கு வடகிழக்கிலுள்ள பிராந்தியமும்.

இந்த ஜில்லாவில் முக்கியமாய் ஏர்க்காட்டுக்கருகில் பற்பலவிதமான நீர்வேம்புச் செடிகள் (Ferns) ஏராளமாய்க் காணப்படுகின்றன.

கால்நடை அபிவிர்த்திக்குச் சென்னை ராஜதானியில் பெயர்பெற்றுள்ள முக்கியமான ஜில்லாக்களில் சேலம் ஜில்லா ஒன்று. மூன்று ஜாதிமாடுகள் விருத்திசெய்யப்பட்டுவருகின்றன. அவை மைசூர் மாடு, ஆலம்பாடி மாடு, திருச்செங்கோடு மாடு. இவைகளுள் மைசூர் ஜாதி மாடுகள் டெங்கணிக்கோட்டைப் பகுதியில் காவேரி நதிக்கு ஓரமாகவுள்ள காடுகளில் வளர்க்கப்படுகின்றன. இரண்டாவது ஆலம்பாடிக் கால்நடைகள் பெண்ணாகரத்தைச் சுற்றியுள்ள காடுகளில் விர்த்தி செய்யப்படுகின்றன. மைசூர் ஜாதிமாடு ஆலம்பாடி மாடுகளைவிடப் பெரியவைகளாகவும் ஆனால் குட்டையான கால்கள் வாய்ந்துமிருக்கின்றன. இவ்விரு ஜாதிக் காளைகளும் வண்டி இழுக்கப் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டுவருகின்றன. தென் ஜில்லாக்களில் நடைபெறும் கால்நடைச் சந்தைகளில் அவைகளுக்கு நல்ல விலை ஏற்படுவது வழக்கம். ஜதை நூறு ரூபாய்க்குக் குறையாமல் நானூறு ரூபாய்கூடப் பெறுவதுண்டு. திருச்செங்கோடு ஜாதி குள்ளமானதெனினும் பசுக்கள் நல்லபால் தரக்கூடியவை.

இந்த ஜில்லாவின் வடபாகத்தில் வெகுகாலமாக மட்டக் குதிரை அபிவிர்த்தி செய்யப்பட்டுவருவது வழக்கமாக ஏற்பட்டிருக்கிறது. மதுரை வியாபாரிகள் இப்பொழு

தும் டெங்கணிக்கோட்டைக்கும் பெண்ணுகரத்திற்கும் அவைகளை வாங்க வருவதுண்டு.

ஆடுகளும் வெள்ளாடுகளும் ஏராளமாக அபிவிர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

காவேரி நதியை ஒட்டியுள்ள காடுகளிலும், மேலகிரிக் குன்றுகளிலும்தான் யானைகள் உண்டு. இந்த ஜில்லாவில் வேறெங்குமே அவைகள் காணப்படுவதில்லையாம். மார்ச்சு-ஏப்பிரல் மாதங்களில் சிறு யானைகளின் கூட்டம் கோயம்புத்தூர்ப் பக்கத்திலிருந்து ஆற்றைக் கடந்துவந்து சில நாட்கள் இருந்து விட்டுத் திரும்பிப்போய் விடுவது வழக்கம்.

முன் ஒரு காலத்தில் இந்த ஜில்லாவிலுள்ள எல்லாக் காடுகளிலுமே புலிகள் இருந்தனவாம். ஆனால் இப்பொழுது அவைகள் அபூர்வம் என்பதுடன் டெங்கணிக்கோட்டையைச் சுற்றியுள்ள காடுகளில்தான் காணப்படுகின்றன.

சிறுத்தைகள், காட்டுப் பூனைகள், புனுகுப் பூனைகள் முதலியன இந்த ஜில்லாவின் எல்லாக் காடுகளிலுமே காணப்படுகின்றன. ராயகோட்டா, உத்தனபள்ளி, சூலகிரி முதலான கிராமங்களில் சிவிங்கிப்புலி பகற்காலங்களில் வெயில் காய்ந்துகொண்டிருக்கக் காணலாம். ஏர்க்காட்டில் சிவிங்கிப்புலி வீடுகளுக்கருகில்வருவது சர்வ சாதாரணமாம். காட்டு மிருகங்களைக் கொன்றுகொண்டு வருபவர்களுக்கு ஸர்க்காரால் வெகுமதியளிக்கப்பட்டு வருகிறது.

பெரிய வேட்டையாடக் கூடிய பிராணிகளுள் காடி, காட்டெருமை, கிருஷ்ண மிருகம், புள்ளிமான் முதலியன விசேஷம் காட்டெருமை காணப்படுவது டெங்கணிக்கோட்

டை, தர்மபுரி, ஊத்தங்கரை முதலான இடங்களிலுள்ள காடுகளில் கிருஷ்ணமிருகம் எல்லாவிடங்களிலுமே உண்டு. இவைகள் காடுகளில் காணப்படுவதில்லை. கொல்லிமலை அடிவாரத்திலும், ஹோசூர் தாலூகாவில் ஹோசூர், டெங்கணிகோட்டை, மதகொண்டபள்ளி, தளி, பேரிகை, அத்திமுகம் முதலிய இடங்களைச் சுற்றி இவைகள் விசேஷமாகக் காணப்படும். புள்ளிமான் எங்குமே காணப்படும். பிராணிகளைத் தவிரக் காட்டுப் பன்றி, குரங்கு, கழுதைப்புலி, ஓனாய், செந்நாய், பெருநரி, குள்ளநரி முதலிய பிராணிகள் அதிகம். பயிரை நாசஞ்செய்யும் காரணம் பற்றிக் காட்டுப் பன்றிகள் ஏராளமாய்க் கொல்லப்படுகின்றன. சேலம், ஹோசூர் இவைகளைச் சுற்றியும், இதர இடங்களிலும் குரங்குகளின் ஹிம்சை அதிகம். சில ஐரோப்பியர்கள் இங்கு நரி வேட்டை ஆடுவதும் உண்டு.

முயல், முள்ளம்பன்றி, கீரிப்பிள்ளை முதலியன எங்குமே அதிகம். தவிரவும் அனேக விதப் பாம்புகளும் ஏராளமாய் மீன்களும் இந்த ஜில்லாவில் உண்டு.

இந்த ஜில்லாவில் ஆயிரத்தில் 747 பெயர்கள் தமிழ் பேசுகிறவர்களெனவும், 148 பெயர்கள் தெலுங்கு பேசுகிறவர்களெனவும், கன்னடம், ஹிந்துஸ்தானி, பட்னூலி, மராத்தி பேசுபவர்கள் முறையே 76, 22, 4, 3, பெயர்களெனவும் கணக்கெடுத்திருக்கிறார்கள். தமிழ் எல்லோருக்குமே தெரிந்திருக்கும். இந்த ஜில்லாவில் ஹிந்துக்கள், முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய மதஸ்தர்களிருக்கிறார்கள். முகம்மதியர்களுள் தக்கணிகள் என்றும், லப்பைகள் என்றும், பிஞ்சாரிகளென்றும் பிரிவினர்களிருக்கின்றார்கள். இந்த ஜில்லாவில் ரம்ஸான், பக்ரீத், முகாம் முதலிய முகம்மதிய பண்டிகைகள் கொண்டாடப்படுவ

துண்டு. முகாம் பண்டிகை காலங்களில் தீமிதி முக்கியம்.

ஜனங்களுள் அனேகர் பச்சை குத்திக்கொள்கிறார்கள். சாதாரணமாய் உயர்தர வகுப்பினர்கள் சாப்பிடுவது அரிசிச்சாதம். மற்றவர்கள் கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்களைச் சமைத்துச் சாப்பிடுவார்கள்.

கும்மி, கோலாட்டம், முதலிய ஆட்டம் சிறுமிகளால் ஆடப்படும். சிறுவர்கள் பாண்டி, கிட்டிப்புள், கோளி முதலிய ஆட்டங்கள் ஆடுவார்கள். தவிரவும் பாரிகோடு, காற்றாடி, உச்சி ஆட்டம், ஐந்தாங்கால், பல்லாங்குழி, தாயக்கட்டம், பதினைந்தும் புலியும் முதலிய ஆட்டங்கள் எல்லோராலும் ஆடப்படுவது சகஜம்.

காமன் பண்டிகை கொண்டாடப்படும் பண்டிகைகளுள் ஒன்று. தேவதைகளுள் ஐயனார், சக்தி அதாவது மாரியம்மன், எல்லையம்மன், அக்காளம்மா, பிடாரி, சாமுண்டி, பத்திரகாளி, துர்க்கை, பூரணை, புட்களை முதலான தேவதைகள் பூஜிக்கப்படுவதுண்டு. எல்லையம்மனைப் பற்றிய ஒரு புராணக் கதையுமுண்டு.

ஜமதக்நி என்ற ஒரு ரிஷிக்கு ரேணுகை என்ற ஒரு மனைவி யிருந்தாள். அவள் நன்னெறியினின்றும் தவறி சக்கிலிகளிருந்தவிடத்திற்கு ஓடிவிட்டாள். அவள் மீது கோபம்கொண்டு ஜமதக்நி ஒரு நாள் தனது குமாரன் பாசுராமன் என்றவனை அவளையும் அவள் ஓடிப்போயிருந்த விடத்திலிருந்த எல்லா சக்கிலிப் பெண்களையும் சிரச்சேதம் செய்துவிடும்படி கட்டளையிட அவரும் அப்படியே செய்தார். தனது குமாரனது பிதுர்பக்தியை மெச்சிய ஜமதக்நியும் அவன் வேண்டிய வரத்தைக்கோறிப் பெற்றுக்கொள்

ளும்படி சொன்னார். பரசுராமரும் தனது தாயார் உயிர்ப்பிக்கப்படவேண்டுமென்று கேட்க ஜமதக்நியும் அவ்வாருக எனக் கூறியருளினார். பரசுராமரும் தனது தாயாரின் தலையை தவருக வேறொரு சக்கிலிப்பெண்ணின் முண்டத்தில் பொருத்தி உயிர்ப்பித்துவிட்டார். சாதாரணமாய் எல்லையம்மன் நான்கு புஜங்களுடனும் கைகளுடனும், ஸர்ப்பங்களாலான கிரீடம் தரித்துள்ளவளாய் மரச்சிலையில் ஏற்பட்டு உட்கார்ந்திருக்கும் பாவனையுடனிருப்பது சகஜமேயாயினும் நைவேத்தியம் முதலியன செய்யப்படுவது கல்லினால் ஏற்பட்டு பூமியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தலைக்கு மாத்திரமே. இந்தத் தலையும் சக்கிலியர்களது தெய்வமாகிய ரேணுகையின் முண்டமும் மாதங்கியென்ற சக்கிலிப் பெண்ணின் தலையும் கூடியுள்ள உருவத்தின் தலையேயாம். தலைமாத்திரமேவைத்துப் பூசிக்கப்படுவதற்கு காரணம் அத்தலைமாத்திரமே மாதங்கியென்ற பெண்ணின் தலையென்ற காரணம் பற்றியே.

விவசாயம்செய்யும் ஜாதியார்களுள் முக்கியமானவர்கள் வேளாளர்கள், பள்ளிகள், ரெட்டிகள் முதலானோர்கள். வேளாளர்கள் அதிக சிக்கனம் வாய்ந்துள்ளவர்கள். அவர்களுள் பத்துப் பிரிவினர்களிருக்கிறார்கள். பள்ளிகளுக்குள் நான்கு வகுப்பினர்களிருக்கிறார்கள். நாட்டான் என்ற வகுப்பினர்கள் கொங்கு வேளாள ஜாதியின் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். இச்சாதியார்களைத் தவிர, அகமுடையர்கள், உடையார்கள், வேட்டுவர்கள், மலையாளிகள் முதலிய ஜாதியார்களும் உண்டு. ரெட்டிகள், தெலுங்கர்கள் கன்னடம் பேசும் விவசாயிகளுள், கம்மாளர்கள், ஒக்கிலியர்கள் முதலானோர்களேயே. ஆடு மாடு மேய்ப்பவர்கள் குறும்பர்கள், கொல்லர்கள் முதலானோர்கள் தவிர மீன்

பிடிக்கும் செம்படவர்களும், வேடர்களும் இந்த ஜில்லாவில் உண்டு.

வியாபாரிகளுள் பலிஜர்கள், கோமுட்டிகள், நகரத்துச் செட்டிகள், பேரிச் செட்டிகள், ஜணப்பர்கள் முதலானோர்கள்.

கைத்தொழில் செய்பவர்கள் கைக்கோளர்கள், தேவாங்கர்கள், பட்டுநூல்காரர்கள் முதலான துணி நெய்யும் ஜாதியார்கள். இவர்களைத் தவிர எண்ணெய் வியாபாரம் செய்யும் வாணியர்களும், கள்ளிறக்கும் சாணார்களும், குயவர்களும், உப்பெடுக்கும் உப்பிலியர்களும், பாய்கள் நெய்யும் வேதக்காரர்களும், கம்மாளர்களும், கூலிவேலைசெய்யும் ஒட்டர்களும், பள்ளர்களும், நாவிதர்களும், வண்ணான்களும், ராணுவ மரபினர்களாகிய மஹாராஷ்டிரர்களும், ரஜபுத்திரர்களும், ராஜுக்களும், வீரசைவர்களாகிய லிங்காயத் ஜாதியார்களும் இந்த ஜில்லாவில் உண்டு. கிராமக் கணக்கு வைப்பவர்கள் கணக்கர்கள்.

சாத்தாணிகள் கோவில்களில் வேலைசெய்பவர்கள். குறவர்களுக்கு ஸ்திரமான இருப்பிட மில்லை. தொம்பர்களும் லம்பாடிகளும் இடமிடமாய்ச் சுற்றித்திரியும் ஜாதியார்கள். இருளர்கள் பில்லி சூனியத்தை அனுசரிப்பவர்கள். தாழ்ந்த ஜாதியார்கள் பறையர்கள், வள்ளுவர்கள், சக்கிலிகள் முதலானோர்கள்.

இந்த ஜில்லாவின் முக்கியமான தானியம் கம்பும், கேழ்வரகும், சோளமும், மற்ற நவதானியங்களும் பயிரிடப்படுவதுண்டு. புஞ்சை நிலங்களில் நெல் பயிர் செய்யப்படுவதும் வழக்கம். தவிரவும், கோதுமை, கரும்பு, பாக்கு, முதலியன பயிர்செய்தல், வெற்றிலைக் கொடிக்கால், வாழை முதலியன வைத்தலும், துவரை, கொள்ளு, அவுரி, காட்

டெள், ஆமணக்கு, நிலக்கடலே, மிளகாய், கொத்துமல்லி, புகையிலே, பருத்தி, காப்பிக்கொட்டை, தேயிலே, ரப்பர் முதலானவை அறுவடை செய்தலும் இந்த ஜில்லாவில் உண்டு. சேலம் மாம்பழம் பிரசித்தியானது.

இந்த ஜில்லாவின் இயற்கையமைப்பினுல் அனேகம் குட்டைகள் ஏற்பட்டுள்ளன. பெண்ணையாற்றில் கிருஷ்ண கிரித் தாலூகாவில் நெடுங்கல் என்னுமிடத்தில் 912 அடி நீளமுள்ள அணைகட்டி. வாய்க்கால்ஏற்படுத்திப் பாரூரி லுள்ளபெரிய குளத்திற்கு ஜலம் கொண்டுவந்து நிரப்ப ஏற் பாடு செய்யப்பட்டிருப்பது பாரூர் ஜல ஏற்பாடு. இவ்வேற் பாடும் 1877-வது வருஷத்திய பஞ்சத்தில் ஏழை ஜனங் களுக்கு உதவி புரியச் செய்த ஏற்பாடு. இப்பாரூர் ஜல ஏற்பாட்டைத் தவிர்த்துத் தஞ்சாவூர் ஜில்லாவின் விவசா யத்தை விர்த்திசெய்யும் காவேரி ஜல ஏற்பாடும், கிருஷ்ண கிரி ஜல ஏற்பாடும், ஸநத்குமார நதியின் ஜலத்தை உபயோ கிக்க ஏற்பட்டுள்ள மாராண்ட ஹல்லி ஏற்பாடும், புலஹல்லி நதி ஓடும் பள்ளத்தாக்கை விவசாயத்தின்கீழ் கொண்டு வரச் செய்துள்ள புலஹல்லி ஜல ஏற்பாடும், இன்னும் சில மராமத்து ஏற்பாடுகளும் இந்த ஜில்லாவில் முக்கியமான வை. சேலம் ஜில்லாக் காடுகளைச் சரிவரப் பாதுகாக்கச் சர்க்காரால் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின் றன. சேலம் காடுகளால் அதிக லாபம் ஏற்படுவது மூங்கில் காடுகளி லிருந்தே. டெங்கனிக்கோட்டைக் காடுகளில் நல்ல சந்தன மரங்கள் உண்டு.

இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள் நெசவும், கால்நடை வளர்ப்பும், சாயம்போடுவதும், எண் ணெய் எடுப்பதும், தோல் பதனிடுவதும், இரும்பு, எஃகு முதலியன எடுப்பதும், கரிசெய்தலும், பித்தளைச் சாமான்

கள் செய்தலும், கூடை, பாய் முதலியன முடைதலும், நார் எடுத்தலும், அவுரிச்சாயம் எடுத்தலும், கற்கட்டிகள் செய்தலும்.

இந்த ஜில்லாவில் அனேக இடங்களில் வாரம் வாரம் சந்தைகள் கூடும். முக்கியமான வியாபாரம், துணி, கால் நடைகள், உப்பு, எண்ணெய், விவசாய தானியங்கள் முதலியவை.

இந்த ஜில்லாவில் ஏற்பட்டுள்ள ரஸ்தாக்களில் பல திப்புவினால் ஏற்படுத்தப் பட்டவைகளாம். இரு பக்கங்களிலும் நிழல்தரும் மரங்களுடன்கூடிய நல்ல ரஸ்தாக்கள் அனேக இடங்களில் உண்டு. ஐந்தில் மூன்று பங்கு ரஸ்தாக்களுக்கு இரு பக்கங்களிலும் நிழல்தரும் நல்ல மரங்கள் உண்டு. அப்படி மரங்கள் வாய்ந்துள்ள ரஸ்தாக்களின் மொத்த நீளம் $1068\frac{1}{4}$ மைல் எனக் கணக்கிடப்பட்டுளது.

தென் இந்தியா இருப்புப் பாதையின், மேற்குக்கரைப் பெரிய இருப்புப்பாதை இந்த சேலம் ஜில்லாவின் வழியாக வடகிழக்கிலிருந்து தென் மேற்காக ஓடுகிறது. 96 மைல் இருப்புப்பாதை இந்த ஜில்லாவில் அடங்கியுள்ளது. பஞ்ச காலத்தில் போடப்பட்ட கிளை இருப்புப்பாதைகள் $25\frac{1}{4}$ மைல் நீளமுள்ள திருப்பத்தூர்—கிருஷ்ணகிரி இருப்புப் பாதை, $18\frac{1}{2}$ மைல் நீளமுள்ள மொரப்பூர்—தர்மபுரி இருப்புப்பாதை. பிந்தியது ஹோசூர்வரைக்கும் கொண்டுபோகப் பட்டு இப்பொழுது $54\frac{1}{2}$ மைல் நீளம் வாய்ந்துள்ளதாக விருக்கிறது.

இந்த ஜில்லாவின் ஜனங்களை வருத்தக்கூடிய வியாதிகள் சுரம், கண்நோவு, சீதபேதி, காலரா, அம்மை, பிளேக் முதலியன. இவைகளுள் பிளேக் என்ற நோயினால் இந்த ஜில்லா மிகவும் பீடிக்கப்பட்டது.

## அத்யாயம் I

### தேச சரித்திரம்

சேலம் ஜில்லாவின் சரித்திரம் தென் இந்தியா சரித்திரத்தை ஒட்டியிருக்கிறது. தென் இந்தியாவின் சரித்திரமோ தக்ஷண பீடபூமியின் ஜனங்களுக்கும், தெற்கிலிருந்த ஜனங்களுக்கும் ஏற்பட்ட போராட்டத்தைப் பற்றிய விவரமே. மௌரிய வமிச சக்கிரவர்த்தியாகிய அசோகாது சிலாசாஸனங்களிலிருந்து தென் இந்தியாவில் சேர சோழ பாண்டிய ராச்சியங்களென்ற மூன்று ராச்சியங்கள் ஏற்பட்டிருந்தமை தெரிகிறது. மௌரிய ராச்சியத்திற்கும் திராவிடர்களது ராச்சியத்திற்கும் இடையில் ஒரு விசாலமான காடிருந்ததாக ஏற்படுவதிலிருந்து அக்காலத்தில் தற்காலத்திய சேலம் ஜில்லா காட்டுப் பிராந்தியமாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. பிற்காலத்தில் அது சோ மன்னர்களுக்குச் சேர்ந்திருக்கக் கூடும். இதன் காரணம் பற்றியே சோன்மலைக்கு சேர்வாரய மலை என்று தற்காலம் வழங்கிவருகிறது.

கம்பர் சேர்நாட்டின் எல்லையைப்பற்றிக் கூறுவதாவது:—

"வடக்குத்திசை பழனி வான்கீழ் தென்காசி
குடக்குத்திசை கோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லை யெனச் செப்பு."

அசோக சக்கிரவர்த்தி கி. மு. 231-வது வருஷத்தில் காலம் சென்றதும் அவரது ராச்சியம் க்ஷீணித்துப் போயிற்று. தெற்கிலிருந்த மூன்று ராச்சியங்கள் அதுபோல்

க்ஷீணித்துப் போகவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தமை யால் அவர்களது பலம் குன்றிப்போகாமல் இருந்தது போலும். கி. மு. 47-ல் ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesor) என்ற வீரரின்கீழ் ரோமர்கள் செங்கடல் (Red Sea) வியா பாரத்தை விருத்திசெய்ய ஆரம்பித்தார்கள். ஆதலின் கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென் இந்திய ராச்சியங்களுக்கும், எகிப்து (Egypt) தேசத் தின் துறைமுகப் பட்டினங்களுக்கும் பலத்த வியாபாரம் ஏற்படக் காரணமாயிற்று. கி. பி 47-வது வருஷத்தில் பருவக்காற்றின் உதவியைக்கொண்டு குறுக்குவழியாகவும் பத் திரமாகவும் மலையாள ராச்சியத்தின் கரைசேரக்கூடுமென்ற விஷயம் தெரிந்ததும் வியாபாரம் இன்னும் பலமாக நடக்கத் தலைப்பட்டது. முக்கியமாக வியாபாரம் செய்யப்பட்ட பொருள்கள் மலையாள தேசத்திலிருந்து மிளகும், இலங் கைத் தீவிலிருந்து முத்தும் கோமேதகமு மாம். கோயம் புத்தூர் ஜில்லாவிலுள்ள படியூர் (Padiyur) என்றவிடத்தில் தான் அக்காலத்தில் அக்காலத்திய ரோமர்கள் (Romans) பிரியப்பட்டு வாங்கக்கூடிய கோமேதகம் அகப்பட்டதாம். ரோமன் நாணயங்கள் ஏராளமாக அகப்படுவதுபழையபாண் டிய ராச்சியத்தின் பிரதான நகரமாகிய மதுரையிலும், சேர ராச்சியத்தின் பிரதான நகரமாகிய கரூரிலும், கோயம்புத் தூர்ஜில்லாவில் பொள்ளாச்சி,சாவடிப்பாளையம், வெள்ளலூர் முதலான இடங்களிலுமே. காவேரி நதிப் பள்ளத்தாக்கின் வழியாக ஒழுங்குபொருந்திய வியாபார மார்க்கம் மதுரைக் கும் கோயம்புத்தூருக்கும் ஏற்பட்டே யிருக்கவேண்டும். பெங்களூருக் கருகில்கூட ஏராளமான ரோம நாணயங்கள் அகப்பட்டன. அக்காலத்தில் ரோமர்கள் தக்ஷணத்துடன்

என்ன வியாபாரம் செய்துவந்தார்கள் என்றதும், அங்கு நடந்தேறிய வியாபாரம் கோயம்புத்தூர் வழியாகச்சென்று நடத்தப்பட்டதாவென்றதும் ஏற்படவில்லை. கி. பி. முதல் நூற்றூண்டில் சேலம் தெற்கிலும், மேற்கிலும், வடக்கிலும் அமைதிவாய்ந்து ஐசுவரியம் பொருந்தியிருந்த நாடுகளால் சூழப்பட்டிருந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. வியாபார மார்க்கம் சேலம் ஜில்லாவின் வழியாக ஏற்படாம லிருந்திருக்கவும் கூடும். ஆயினும் அப்பக்கத்திய நாடுகளின் வழியாக நேராக வராவிடினும் பயனை அடைந்துதானிருக்க வேண்டும்.

பாணர், கபிலர், திருவள்ளுவர் முதலான தமிழ்ப் புலவர்கள் ஏற்பட்டிருந்த காலம் இதுவே போலும். தகடூர் அதியமான் நெடுமான் அஞ்சியின் ஆதரணையின்கீழிருந்து வந்ததாகச் சொல்லப்படும் ஔவையார் இருந்த காலமும் இதுவே ஆகும். இப்பொழுதுதான் பெரியாறு நதியின் முகத்துவாரத்தில் மேற்கு சமுத்திரக்கரையில் வஞ்சி என்னுமிடத்தை ராஜதானி நகராகக்கொண்டு சேரமன்னன் செங்குட்டுவன் என்றவன் ஆண்டனன். அவனது ராச்சியம் கொங்கு நாட்டிலும் கூடப் பரவியிருந்தது.

கொங்குமண்டல எல்லையைப்பற்றி கொங்குமண்டல சதகத்தி லிருப்பதாவது :—

"மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழநி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின் வடக்கு
விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்கு மண்டலமே."

மாந்தரம் சேரல் இரும்பொறை என்ற சேர அரசனுடைய ராஜதானி நகரம் ஏற்பட்டிருந்தது கொல்லி மலையாம். ரோமாபுரி அரசர்கள் தங்கள் நாட்டின்

நாணயங்களை இங்கு ஏராளமாக வாரி இறைத்திருந்திருப் பதிலிருந்து இந்நாடு அப்பொழுது வித்தியாபிவிர்த்தி யில் சிறந்தே இருக்கவேண்டுமென்று காட்டுகிறது. நீரோ (Nero) என்ற ரோமன் சக்கிரவர்த்தி இறந்தது அவன் நாட்டிலேயே விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டன. ரோமர்கள் முந்தி சுகபராயணர்களாக இருந்ததைவிட் டுச் சாதாரணமாக வசிக்கத் தலைப்பட்டுவிடக் கீழ்ப்பிராந்தி யங்களுடன் அவர்கள் செய்துவந்த வியாபாரம் நின்று விட்டது. கி. பி. நான்காவது நூற்றுண்டுவரை தென் இந்தியா சரித்திரம் ஒன்றுமே ஏற்பட்டிருக்கவில்லை. நான்கா வது நூற்றுண்டில் தான் பல்லவர்கள் கிழக்குச் சமுத்திரக் கரை நாடுகளில் ஊர்ஜிதமாய்த் தங்கிநின்று பிறகு தொண் டைமண்டலமென்று பிரசித்திபெற்ற நாடாக அதைச் செய்துவிட்டனராம். இப்பல்லவர்கள் பற்பல ராஜதானி நகரங்களிலிருந்து ஆண்டுவந்ததாக ஏற்பட்டுளது. அவை களுள் சில கோதாவரி நதியின்மீதுள்ள வேங்கி, பலக்கடா என்ற இடங்களாம். பிந்திய இரண்டிடங்களும் ஒன்றக் கொன்று தாழ்ந்திருந்ததாக ஏற்படவில்லை. ஆனால் காஞ்சி மன்னன் அவைகளிரண்டின் மீதுமே அதிகாரம் செலுத்தி வந்திருந்தது ஏற்படுகிறது பிந்திய காலங்களில் மஹாராஷ் டிரர்கள் செய்துவந்ததுபோல் பல்லவர்களும் அவர்களது காலத்தில் புராதன ராச்சியங்களிலிருந்து கப்பம் வசூல் செய்துகொண்டு வந்திருக்கக்கூடும். அத்தகைய சம்பந்தம் பல்லவர்களுக்கு சேலம் ஜில்லாவிலும் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் எட்டாவது நூற்றுண்டுவரை அங்கு பல்லவர்களது ஆட்சி ஏற்பட்டிருந்ததைக் காட்டக்கூடியது ஒன்றுமே இல்லை. பாதாமி சாளுக்கியர்கள் தக்ஷிணத்திலிருந்து மாரங்களை திவிடப்பட்டதால் பெயர் குன்றிப்போனது லையிருந்துடன்

காஞ்சிமன்னர்கள் பட்டத்திற்கு வாராதபடி ராஜவமிசத்தின் ஒரு கிளைக்குச் சேர்ந்த நந்திவர்மன் பல்லவமல்லன் தடுத்த தாகக்கூறப்பட்டுள்ளது இந்த எட்டாவது நூற்றாண்டி லேதான். பிரஜைகள் இவனை மன்னனாகத் தெரிந்தெடுத்த காரணம்பற்றி இவன் ராச்சியாதிபத்தியத்தை அடையப் போர்புரியவேண்டி நேர்ந்தது. இவனுக்கேற்பட்ட ஜெய மும் இவனது தளகர்த்தன் உதயசந்திரனது சாமர்த்தியத் தாலேயே. நியாய பரம்பரை மன்னன் கக்ஷிக்குச் சேர்ந் தவர்களாகிய "டிராமில அரசகுமாரர்களால்" இவன் வளைத்துக் கொள்ளப்பட்டிருந்த பொழுது இவனை விடுவித்ததும் இந்த உதயசந்திரனே. டிராமில அரசகுமாரர்களது தலைவன் சித்திரமாயன் என்றவன் கொலையுண்டது இந்த உதயசந்திரன் என்றவனாலேயே யாம். திருநெல்வேலியிலிருந்து நெல்லூர்வரை இவ்வீரன் தனது எஜமானனுக்கு வெற்றி உண்டாக்கிக் கொடுத்தான். வடஆற்காடு ஜில்லாவின் எல்லைக்குள் திருப்பத்தூர் தாலூக் காவின் ஓரத்தில் பாலாற்றின் கரையில் ஏற்பட்டுள்ள உத யேந்திரம் என்ற கிராமம் இவனது பெயருடன் சம்பந்தப் பட்டுளது. உதயேந்திரம் பட்டய சாசனங்கள் சேலம் ஜில்லாவின் புராதன முதல் முதல் ஏற்பட்டுள்ள சரித்திரக் குறிப்பேயாகும். அவைகள் எட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த ஜில்லா முழுவதுமே இல்லாமற்போனு லும் இதன் ஒரு பாகமாவது நாகரீகம் வாய்ந்துள்ளதாக இருந்திருக்கவேண்டுமென்று எடுத்துக்காட்டுகிறது.

நந்திவர்மன் பல்லவமல்லன் ஐம்பது வருஷகாலம் ஆண் டிருந்தான். இருபத்திரண்டு வருஷ காலம் தனது ராச்சி யம் சிதறுண்டு போகாமல் காத்தும் வந்தான். ஆனுல் கி. பி. 733-வது வருஷத்திற்குப் பிறகு இவனது ராச்சியம்

விக்கிரமாதித்தன் என்ற அரசனது பேரனுகிய இரண்டாவது விக்கிரமாதித்தன் என்றவனுல் படையெடுக்கப்பட்டது. இவன் பல்லவர்களைத் தக்ஷிணத்திலிருந்தும் துரத்திவிட்டுச் சாளுக்கிய அதிகாரத்தைத் திரும்பவும் ஸ்தாபித்தான். இவன் காஞ்சீபுரத்தில் பிரவேசித்து அங்கொரு ஜயஸ்தம்பத்தை ஸ்தாபித்தானே ஒழிய அந்நகரத்தைச் சூறையாடவில்லை. அங்குள்ள பிரதான சிவன் கோவிலுக்கு ஏராளமான பொன் கொடை யளித்துவிட்டு அவன் அங்கிருந் தகன்ருன்.

இந்த பாதாமி சாளுக்கியர் தமதுவெற்றி நீடித்துநிற்கவில்லை. கி. பி. 757-வது வருஷத்தில் மால்கேத் (Malkhed) ராஷ்டிரகூடர்களால் இவர்களது ராச்சியம் முற்றிலும் அழிக்கப்பட்டது. நந்திவர்மன் பல்லவமல்லனது தோல்வி பல்லவர்களது பெருமை குன்றியதின் அறிகுறியே. அவனிறந்ததும் பாக்கியிருந்த பல்லவ ராச்சியம் பல்லவமல்லனது நேர்க்கிளைக்குச் சேர்ந்தவர்களாகிய கங்கபல்லவர்களாலும், நந்திவர்மன் பல்லவமல்லனது தளகர்த்தனுகிய உதயசந்திரனுல் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள சித்திரமாயனுக்குப் பிந்தி வந்த பல்லவர்களாலும் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது. சிலர் பல்லவ ராச்சியம் கங்கபல்லவர்களாலும், பல்லவமல்லன் ஆக்கிரமித்து அடைந்த சிம்ஹாசனுதிபதியாகவிருந்த இரண்டாவது பரமேசுவரவர்மன்னனது சந்ததியார்களாலும் பங்கிட்டுக்கொள்ளப்பட்டதென்றும் கூறியுளர். கங்கபல்லவவமிசத்தினர்கள் தங்களது பெயர்களுக்குமுன் 'கோ' அதாவது அரசன் என்பதைக் குறிக்கும் பதத்தைச் சேர்த்துக்கொள்வதும், பல்லவ வமிசத்தியவர்கள் தங்கள் பெயர்களுக்குப்பின் 'வர்மன்' என்று சேர்த்துக்கொள்வதும் சகஜம். இவர்கள் ஆண்டு

வந்த ராச்சியம் மிகவும் பெரிதேயெனினும், இவர்களது நாகரீகம் இவர்களது முன்னோர்களது நாகரீகத்தைவிடக் குறைந்ததாகவேயிருந்தது போலும். இவர்களைப்பற்றித் தெரிவதெல்லாம், இவர்களது வீரர்கள் கால்நடைகளைக் கொள்ளையடிக்கும்பொழுது கொலையுண்ட விஷயமே. இவர்களைப்பற்றிய விவரம் காணப்படுவது தஞ்சாவூர், திரிச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, குடிமல்லம் வரைக்கும் சித்தூர் ஜில்லாக்கள், சேலம் ஜில்லாவின் வடமேற்குப் பாகமும் முதலான இடங்களிலேயே யாம். சோழர்கள் இவர்களைத் தங்களது மேலரசர்களாகக் கொண்டிருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

காஞ்சி, பாதாமி இவ்விடங்கள் அழிந்ததும் அல்ப சுயேச்சையை அடைந்த ராச்சியம் பாணர்களது ராச்சியம். இது 'வடுகவலியன் மெற்கு' என்று வர்ணிக்கப்பட்டுளது. இதன் பொருள் ஆந்திர ரஸ்தாவிற்கு மேற்கிலுள்ள நாடு என்னும் ஆந்திர ரஸ்தாவின் வடக்குப்பாகமாம். பாணர்கள் ஆண்ட ஜில்லாவின் பெயர் வடுகுவலி. அவர்களது நாடு மைசூரின் ஒரு பாகத்திலும் சேலம், வடஆற்காடு ஜில்லாக்களின் சில பாகத்திலும் பரவியிருந்ததென்பதுடன் அவர்களது சிலாவிகிதங்கள் வடக்கில் நெல்லூர் வரைக்கும்கூடக் காணப்படுகிறது. முந்திய காலத்தில் வாணபுரம் என்ற பெயர்வாய்ந்திருந்த, வடஆற்காடு ஜில்லா குடியாத்தம் தாலூகாவிலிருந்த திருவல்லம் என்றவிடம் அவர்களது ராஜதானி நகரமாக ஏற்பட்டிருக்கவேண்டும்.

ஒன்பதாவது நூற்றாண்டில் கங்கபல்லவ வமிசத்தின் கிளைகள் ஒன்றைச்சேர்ந்த மன்னன் ஒருவன்கீழ்ப் பாணர்கள் பாராமஹால் நாட்டை ஆண்டு வந்திருக்கிறார்கள். பாதாமி ராச்சியம் நசித்ததும் தென் இந்தியாவில் ஏற்பட்ட

குழப்பத்தில் சிவமாரன் என்ற கங்கமரபைச்சேர்ந்த அரசகுமாரன் ஒருவன் தலையெடுத்தான். இவன் 'கொங்கல் நாடெண்ணுயிரம்' என்ற நாட்டின் பரம்பரை அரசனுக ஏற்பட்டான். இவனும் இவனுக்குப் பிந்திவந்தவர்களும் கொங்கணி மன்னர்களெனக் கூறப்பட்டு வந்தார்கள். இவனுக்குப் பிறகு வந்தவன் ஸ்ரீ புருஷமுத்தரசன் என்ற இவனது மகனே அல்லது பேரனேவாம். இவன் முதலில் 'மஹாராஜா' என்ற பட்டமும், பின்னர் 'மஹாராஜாதிராஜா,' 'பரமேசுவரா' என்ற பட்டங்களும் சூட்டிக்கொண்டிருந்தனனும். அவன் ஆண்ட ராச்சியம் தற்காலத்திய மைசூர் நாட்டின் கிழக்குப்பாகமே. அது கெங்கவாடி தொண்ணூற்றாயிரமென்று வழங்கிவரப்பட்டு வந்ததாம். தொண்ணூறுயிரம் கிராமங்கள் அடங்கியிருந்த நாடாகவிருந்ததால் அப்பெயர் ஏற்பட்டதாம். கொள்ளேகாலத்துக் கருகில் காவேரி நதிக்கரையில் இப்பொழுது மணலால் மூடப்பட்டுள்ள தலைக்காடு என்றவிடம் அவனது ராஜதானி நகரமாக ஏற்பட்டிருந்தது.

காவிரி உற்பத்தியைப்பற்றிக் கோங்குமண்டல சதகத்தில் தெரிவித்திருப்பதாவது :—

"சீரார் வளவ னிலம்புன லூடாச் செழிப்புறவும்
போரார் வரநதி யெய்துறு பாவம் பிரிந்திறவும்
ஏராரும் பொன்னி புவியுற முன்ன மிடமுதவி
வாரார் பெருமை படைத்தது நீள்கொங்கு மண்டலமே."

அவன் நாற்பத்திரண்டு வருஷங்கள் ஆண்டிருந்ததாகத் தெரிகிறது.

எட்டாவது நூற்றுண்டின் மத்தியிலிருந்து பத்தாம் நூற்றுண்டின் கடைசிவரையுள்ள காலத்திற்கு 'ஊழியமானி

யக்காலம்' (Feudal period) என்ற பெயர் பொருந்தும். இக் காலம் ராஷ்டிரகூடர்கள் பாதாமி சாளுக்கியர்களை ஒடுக்கிய காலத்தில் ஆரம்பமாகிக் கலியாணிசாளுக்கியர்கள் ராஷ்டிர கூடர்களை ஒடுக்கியதுடன் முடிவுபெறுகிறது போலும். கங்கபல்லவர்கள் நூற்றைம்பது வருஷம் மிக்கப் போராட்டத்துடன் நிலைத்துநின்று பிறகு சோழர்களால் ஒடுக்கப் பட்டார்கள். இந்த சோழ ஆட்சியின் பரவுதல் ராஷ்டிர கூடர்களாலும் அவரது ஊழிய மானியக்காரர்களாலும் சிறிது காலம் தடுக்கப்பட்டது. இந்த ராஷ்டிரகூடர்கள் ஒடுக்கப்பட்டதும் பெரிய ராஜாராஜனது வெற்றி பின் தொடர்ந்ததாம். பத்தாவது நூற்றாண்டின் கடைசியில் தென் இந்தியாவின் ராஜாங்க விஷயம் திரும்பவும் இரண்டு விரோதிகளான மன்னவர்களின்கீழ் வரும்படி நேர்ந்தது.

இந்த "ஊழிய மானியக் காலம்" மூன்று பாகங் களாகப் பிரிவுபட்டுளது. ஒன்று, மூன்றாவது கோவிந் தன் காலத்திய சண்டையும் ராச்சியம் ஒன்று கூட்டப்பட் டதும் நேர்ந்துள்ள காலம். இரண்டாவது நீடித்த அமோக வருஷனது அமைதி பொருந்தியுள்ள காலம். மூன்றாவது ராஷ்டிரகூடர்கள் நசித்து அராஜகமாக விருந்த காலம். மூன்றாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூன்றாவது கோ விந்தன் என்ற ராஷ்டிர கூடன் தக்ஷணத்தில் அதிபதியாக விருந்தான். இவன் தலைக்காடு மேற்கு கங்கர்களது மேல ரசனாக ஏற்பட்டதும் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் சேலம் ஜில்லாவின் சரித்திரத்தை ஒரு விதத்தில் தெரிவி க்கும்படிக்கான ஏற்பாட்டைச் செய்துவைத்தானும். ஸ்ரீ புருஷமுத்தரசன் அவனது அதியுன்னத நிலைமையைக் குறிக்கும் பட்டத்தை நெடுநாள் அனுபவிக்கும்படி விடப் பட்டிருக்கவில்லை. ராஷ்டிரகூடர்களது தஸ்தாவேஜிகளி

லிருந்து துருவன் என்ற அரசன் கங்க அரசகுமாரனைக் கைதி செய்துவைத்திருக்க மூன்ருவது கோவிந்தன் நெடு நாள் சிறையிலிருந்த அவனைவிடுவித்து அவனது நாட்டிற்கு அனுப்பிவிட்டான் என்ற விஷயம் தெரிகிறது. இந்த கங்க அரசகுமாரன் நன்றியறிவின்றி அகம்பாவம் கொண்டு மூன்ருவது கோவிந்தனிடம் விரோதம் பாராட்ட அவனால் மறுபடியும் பிடித்துச் சிறையிலிடப்பட்டான். இந்த கங்க அரச குமாரனது பெயர் இன்னதென்று தெரியவில்லை. மேலே சொன்ன மூத்தரசனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்களாம். அவர்களுள் மூத்தவன் இரண்டாவது சிவமாறன் என்றவன். இரண்டாவது குமாரன் ரணவிக்கிரமன் என்ற பெயர் வாய்ந்திருந்தவன். சிவமாறன் என்ற ஒருவன் ராஷ்டிரகூடர்கள், சாளுக்கியர்கள் முதலானோர்களது படைகளை வென்று துருவனது கணக்கற்ற குதிரைப் படைகளையும் ஒடுக்கிப் பிரக்கியாதிபெற்றிருந்தானும். இரண்டாவது சிவமாறன் என்றவன் அவனது தகப்பனால் சேனாதிபதியாக நியமிக்கப்பெற்றுப் போரில் தோற்றுப்போய்த் துருவன் என்றவனால் சிறையிலிடப்பட்டிருந்து பிறகு அவனது தகப்பனிறந்ததும் கங்கர்களது அதிபதியாக மூன்ரும் கோவிந்தனால் விடுதலைசெய்யப்பட்டு அவனது ஆதிபத்தியத்தின்கீழ் ஆண்டுவர முடிசூட்டப்பட்டிருக்கவேண்டும். இந்த இரண்டாம் சிவமாறனும், சிம்ஹாஸனம் பெற்றதும் மூன்ரும் கோவிந்தனுக்கு விரோதமாகக் கலகம்செய்த காரணம்பற்றித் திரும்பவும் பிடித்துச் சிறையிலிடப்பட அவனது இளைய சகோதரன் மேற்கு கங்கர்களது அதிபதியாக ஏற்பட்டிருக்கவேண்டும். இப்படி கைதிசெய்து சிறையிலிடப்பட்ட அரசகுமாரன் இரண்டாம் சிவமாறன் அல்லவெனில் அவ்வாறு செய்யப்பெற்றவன்

ஸ்ரீ புருஷமுத்தரசனுகவாவ திருக்கவேண்டும். அவன் ஒடுக்கப்பட்டதற்குக் காரணமும், அவன் ராஜபட்டங்களைத் தரித்துக் கொண்டதேபோலும். முத்தரசனது மகன் ராமவிக்கிரமன் 810-வது வருஷத்தில் ஆள ஆரம்பித்து ராஷ்டிரகூட அரசர்களின்கீழ் ராஜபக்திவாய்ந்த குறுநில மன்னனுக இருந்துவந்தது நிச்சயமேயாம். இச்சமயத்தில் மேற்கு கங்கர்களது ராச்சியமும் பிரிவுபட்டுக் கிழக்குப் பாகம் கோலார் என்னுமிடத்தைப் பிரதான நகரமாகக் கொண்டு இரண்டாவது சிவமாறனுலும், அவனது சந்ததியார்களாலும் தனியாக ஆளப்பட்டு வந்திருக்கவேண்டும்.

மூன்ருவது கோவிந்தனுக்குப் பிறகு அவனது மகன் முதலாவது அமோகவர்ஷன் பட்டத்திற்குவந்தான். இவன் அறுபத்திரண்டு வருஷ காலம் ஆண்டிருந்தான். ஜெயின மதத்தில் பக்தியும் கலைகளில் ஆதரமும் கூடியிருந்த இவ்வரசன் மூன்ருவது கோவிந்தன்புரிந்த போர்களினுல் ஏற்பட்ட பலனை முற்றிலுமே அனுபவித்துவந்தான் என்றதுடன் கிழக்குச் சாளுக்கியர்களை நெருங்கவிடாமலு மிருந்தான்போலும். பிறகு தனது அந்தியகாலத்தில் இவன் தனது குமாரன் இரண்டாவது கிருஷ்ணன் என்றவனை யுவராஜாவாகச் செய்தான்.

கி. பி. 877-ல் அமோகவர்ஷன் இறந்துபோக அதிலிருந்து ராஷ்டிரகூடர்களது அதிகாரம் நசிக்கத் தலைப்பட்டதாம். அவனுக்குப் பின்வந்தவர்கள் பலம் குன்றியவர்களாக விருந்ததால் தெற்கில் கலகம் ஏற்படக் காரணமாயிற்று.

கங்கபல்லவ நந்திவிக்கிரம வர்மனுக்குப் பிறகு அவனது மகன் நிருபதுங்கன் பட்டத்திற்கு வந்தான். இம்

மாயில் ஜெயசீலனாக இருந்தவன் இவனேயாம். இவன் ஆண்டபொழுது கங்கபல்லவர்களது சின்னமாக ஏற்பட்டிருந்த யானை, ஹம்சம் இந்தச் சின்னங்களை விட்டுவிட்டுப் புராதன பல்லவர்களது சின்னமாகிய விருஷபத்தைக் கைக்கொண்டான். தவிரவும் தெற்கில் திரிச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்ப் பக்கத்தில் தனது ராச்சியத்தை விஸ்தரிக்கச்செய்வதில் முயற்சி எடுத்துக்கொண்டான். ஆனால் பாண்டிய சிம்ஹாஸனம் பெற்றிருந்த வரகுணவர்மன் என்ற பாண்டிய மன்னன் அவன் அவ்வாறுசெய்ய இடங்கொடுக்கவில்லை. கும்பகோணத்திற் கருகில் திருப்புறம்பியம் என்னுமிடத்தில் நேர்ந்த சண்டையில் வரகுணனுக் கெதிரிகளாக அபராஜிதன் என்றவன் கீழ் கங்கபல்லவர்களும் முதலாவது பிருதிவீபதியின் கீழ கோலார் கங்கர்களும் கூடிநின்றார்கள். முதலாவது பிருதிவீபதி கொல்லுண்டான். ஆயினும் வரகுணனை முறியடித்தோடும்படி செய்ததிலிருந்து கங்கபல்லவர்களுக்குச் சில காலம் அமைதி ஏற்பட்டதுபோலும்.

தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூகாவிலுள்ள திருப்புறம்பியம் சண்டை முக்கியமானது. ஏனெனில், வரகுணனது தோல்வி சோழ ராச்சிய ஸ்தாபனத்திற்குக் காரண மாயிற்று. கி. பி. 880-ல் முதலாவது ஆதித்தன் என்ற அரசகுமாரன் சோழ மன்னனாக ஏற்பட்டிருந்தான். கொங்கு தேசராஜாக்களுக்கேற்ப அவன் கி. பி. 894ல் கொங்கு தேசத்தை ஜெயித்தான். ஆனால் அவனது செய்கைகளில் பெரிதானது தொண்டமண்டலப் படையெழுச்சியும், அபராஜிதனதுதோல்வியும், கெங்கபல்லவர்களது ஒடுக்கமும். இந்த முதலாவது ஆதித்தனுக்குப் பிறகு அவன் மகன் முதலாவதும் பராந்தகன் பட்டத்திற்கு வந்

தான். அவன் ராஜதந்திரம் தெரிந்தவன் என்றது மாத்திரமேயன்றி சாமர்த்தியம் பொருந்தியுள்ள போர் வீரனுமாவன். அவன் கி. பி. 948-வது வருஷம் வரை ஆண்டிருந்தான். அவனது சிலா லிகிதங்களைக் கன்னியாகுமரியிலிருந்து காளஹஸ்தி வரையுள்ள பிராந்தியங்களிலிருக்கக் காணலாம். அவன் மதுரையைப் பிடித்ததிலிருந்து "மதுரைகொண்டான்" என்ற பட்டம் பெற்றான். அவன் கீழ் சேலம் ஜில்லாவின் தென்பாகம், சோழநாட்டில் ஒருஸ்திரமான ஒழுங்கு வாய்ந்துள்ள பாகமாக ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில் பாராமஹால் நொளம்ப பாடியில் சேர்ந்திருந்தது. ராஜமல்லன் என்றவன் தனது மகள் ஜயபி என்றவளை நொளம்ப பாடி ராஜன் என்ற நொளம்ப அரசனுக்குக் கல்லியாணம் செய்து கொடுத்திருந்தான். பிறகு அவர்களது மகன் நொளம்ப சிம்ஹாஸனம் ஏறினான். அவன் அடங்காத சுபாவம் வாய்ந்துள்ளவன். பாணர்களுடன் சண்டையிட்டு அவர்களை நாசப்படுத்தினான். அவர்களை பாராமஹாலிலிருந்து அகற்றினான்.

முதலாவது ஆதித்தன் கங்கபல்லவர்களை ஒடுக்கினது பாணர்களுக்குப் பரம்பரையாக ஏற்பட்டிருந்த நேசர்களின் உதவியை இழக்கும்படி செய்ததாம். மஹேந்திரன் படையெழுச்சி அவர்களது ராச்சியத்தில் பாதியை இழக்கும்படி செய்தது. கங்கபல்லவ நந்திவிக்கிரமனது ராஜபக்தி வாய்ந்திருந்த கீழரசன் முதலாவது விக்கிரமனுக்குப் பிறகு அவனது மகன் இரண்டாவது விஜயாதித்தன் பட்டத்திற்கு வந்தான். அவனது சிலா லிகிதங்களிலிருந்து ஒருவர் கீழிராத சுபாவம் வாய்ந்தவன் அவனென்று ஏற்படுகிறது. அவனுக்குப் பிறகு வந்த இரண்டாவது விக்கிரமாதித்தியன் ராஷ்டிரகூடர்களுடன் சேர்ந்து

கொண்டு இரண்டாவது கிருஷ்ணனின் நேசனானன். கோலார் கங்கர்கள் தாங்கள் இவ்விஷயத்தில் புத்திசாலிகளெனக் காட்டிக் கொண்டார்கள். திருப்புரம்பிய சூரன் முதலாவது பிருதுவீபதியினது மகன் மாற சிம்ஹன் என்றவன் அவனுக்குப்பிறகு பட்டத்திற்கு வந்தான். அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவனது மகன் இரண்டாம் பிருதுவீபதி ஹஸ்திமல்லன் என்ற பெயர் பூண்டு முதலாவது பராந்தகனுடன் சேர்ந்து கொண்டான். கி. பி. 914-வது வருஷத்திற்குச் சற்றுமுன் பராந்தகன் பாணர்களை எதிர்த்துப் பாணராச்சியத்தை அழித்துக் கோலார் கங்க ஹஸ்தி மல்லனை அதன் அரசனாக ஏற்படுத்தினான். இவ்வேற்பாடும் புத்திசாலித்தனமான ஏற்பாடே. ஏனெனில் ஹஸ்தி மல்லனது தகப்பன் சகோதரி முதலாவது பாண விக்கிரமாதித்தனை மணம்செய்து கொண்டிருந்தாள். ஹஸ்தி மல்லனும் சோழர்கள் ஓங்கி நின்றவரையில் பாணர்களது சின்னங்களாகிய கிருஷ்ண மிருகம், எருது இச்சின்னங்களை வைத்துக்கொண்டு விசுவாஸம் பொருந்திய சோழ மன்னனுக்குக் கீழ் சிற்றரசனாக யிருந்து வந்தான்.

மஹேந்திரனது நடத்தைக்குக் காரணம் தலைக்காட்டில் மேற்கு கங்கர்களுள் ஏற்பட்ட கலகமேயாம். ராஜமல்லன் மகன் முதலாவது புதுகன் என்றவன் சுமார் கி. பி. 870ல் ராஜமல்லனுக்குப் பிறகு சிம்ஹாஸனம் ஏறினான். சுமார் கி. பி. 908ல் இந்தப் புதுகனது மகன் இரியப்பா என்றவன் பட்டத்திற்கு வந்தான். இந்த இரியப்பா நொளம்பர்களது நண்பனாகவும் ராஷ்டிரகூடர்களது விரோதியாகவும் ஏற்பட்டிருந்தான். முதலாவது புதுகனுக்கு ராக்சேய கங்கன் என்ற மூத்த குமாரன் ஒருவனிருந்து அவன் நொளம்பர்களால் கொல்லப்பட்ட

செய்தது மிகவும் சாமர்த்தியத்தைக் காட்டும் காரியமே. இந்தப்புதுகனும், கிருஷ்ணனுமாக ஒன்றுகூடிச்சோழர்களை ஒடுக்க முயன்றார்கள். சோழநாடு படையெடுக்கப்பட்டு, ஒருவருஷத்திற்குள் ஆற்கோணத்திற் கருகிலுள்ள தக்கோலம் என்றவிடத்தில் இரு கக்ஷிக்காரர்களுக்கும் போர் ஏற்பட்டது. சோழர்களது சைனியம் முறியடிக்கப் பட்டு சோழ அரசகுமாரன் ராஜாதித்தனும் போரில் கொல்லப்பட்டான். கோலார் கங்கஹஸ்திமல்லன் வேறு வழியின்றி ஜெயம் பெற்றவர்களுக்குச் சிற்றரசனாக, இருக்க நேர்ந்தது. தக்கோலத்தில் ஏற்பட்ட ஜெயத்திற்குப் பிறகு மூன்றாவது கிருஷ்ணன் இருபதுவருஷ காலம் ஆண்டான். புதுகனும் சுமார் கி. பி. 953ல் இறந்தான். அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த ராஜ கங்கனைப்பற்றித் தெரிந்தது ஒன்றுமேயில்லை. கி. பி. சுமார் 963ல் மாறசிம்ஹன் என்றவன் மேற்கு கங்கர்களது சிம்மாஸனம் ஏறினது ராஷ்டிரகூடர்களுக்கு முதுகெலும்பு போலிருந்ததாம். அவன் செய்து முடித்த, முதல் காரியம் முரட்டு சுவபாவம் பொருந்திய நொளம்பர்களை ஒடுக்கினது. இச்செய்கையின் வெகுமதியாக முப்பத்தீராயிரம் கிராமங்கள் அடங்கிய நொளம்ப பாடி என்ற ராஜதானி இவனுக்களிக்கப்பட்டது. தவிரவும், "நொளம்ப குலாந்தகன்" என்ற பட்டத்தையும் பெற்றான். இன்னும் வேறுவிதத்திலும் ஏராளமான தேசத்தைத் தனது ஆட்சியின் கீழ்கொண்டு வந்த இவன் தென் இந்தியாவில் மிக்க பராக்கிரமம் வாய்ந்த அரசர்களுள் ஒருவனாகவும் ஏற்பட்டிருந்தான். குஜராத் (Gujarat) படையெழுச்சியில் இவன் மூன்றாவது கிருஷ்ணராயனுக்குப் பேருதவியும் புரிந்தானும். ஆனால் ராஷ்டிரகூடர்களது நல்லகாலம்போய்க் கெட்டகாலம் ஆரம்பமாகத் தலைப்பட்

டது. மூன்றுவது கிருஷ்ணன் இறந்த சில வருஷங்களுக்குள் ராஷ்டிரகூட ராச்சியம் அழிவுற்றது. மாற ஸிம்ஹன் தன்னுலியன்ற உதவிபுரிந்தான். ஆயினும், பிந்திய கலியாணி சாளுக்கிய பாம்பரையை ஸ்தாபித்த இரண்டாவது தைலன் அந்த ராச்சியத்தை அழித்துவிட்டான். மேற்கு கங்கர்களும் நீடித்திருக்கவில்லை. கி. பி. 974ல் மாறசிம்ஹனும் ராச்சியத்தை தனது மகன் பாஞ்சால தேவனிடத்தில் ஒப்படைத்திருந்தான். இந்த பாஞ்சாலதேவன் சுயேச்சையை அடைய முயன்ற பிறகு இரண்டாவது தைலனுல் தோற்கடித்துக் கொல்லப்பட்டான். இப்பாஞ்சால தேவனது மகன் ராசமல்லன் என்றவன்தான் இவ்வமிசத்தின் கடைசி அரசன். அவனிறந்ததும் கங்கநாடு சாளுக்கிய ராச்சியத்தில் ஒடுக்கமாயிருக்கிறது.

இந்த சாளுக்கியர்களிடமிருந்து தான், சோழர்கள் கங்கபாடியை அடைந்தார்கள். தக்கோலத்தில் நேர்ந்த தோல்விக்குப் பிறகு தலையெடுக்கச் சோழர்களுக்கு ஐம்பது வருஷகாலம் பிடித்தது. முப்பத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு முதலாவது ராஜராஜன் சோழநாட்டின் சிம்ஹாஸனம் ஏறினுன். கி. பி. 997ல் சாளுக்கிய தைலன் இறந்துபோனுன். இதனுல் பலம்பெற்ற ராஜராஜனும் கங்கபாடி, நொளம்ப பாடி (பெல்லாரி), குடகு, கிழக்கு சாளுக்கியர்களது ராஜதானி நகரமாகிய வேங்கி முதலிய இடங்களை ஜயித்துக் கொண்டான். வேங்கியை ஜயித்தது முப்பது வருஷத்திய அராஜகத்தை அங்கிருந்தகற்றியது. ஏனெனில் அவன் கிழக்கு சாளுக்கிய பாம்பரையைச் சேர்ந்த ஒருவனை அங்கு அரசனுக ஏற்படுத்திச் சிலநாட்களுக்குப் பிறகு வேங்கி நாட்டரச குமாரன் விமலாதித்தியன் என்றவனுக்குத் தனது

தும், ராஷ்டிரகூடர்களது அப்பொழுதைய பலஹீனத்தை உதவியாகக் கொண்டு நொளம்பர்களுடன் நட்புக் கொண்டிருக்க வேண்டும். இதற்குக்காரணம் கி.பி. சுமார் 938வது வருஷத்தில் இரியப்பா இறந்ததும் நேர்ந்ததிலிருந்து ஏற்படுகிறது. மூன்றுவது கிருஷ்ணன் பட்டத்திற்கு வந்ததும் ராஜமல்லன் என்ற இரியப்பன் மகன் அவனது தகப்பனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தான். மூன்றுவது கிருஷ்ணன் அவனது மூத்தசகோதரி ரேவக்கா என்றவளை மணந்து கொண்ட புதுகன் என்றவனது நட்பைப் பெற்றுன். இரியப்பன் இறந்த ஒருவருஷத்துக்குள் புதுகன் கிருஷ்ணனது உதவிகொண்டு அவனது மகன் ராஜமல்லனைக் கொலை செய்து அவன் ஸ்தானத்திலிருந்து ஆண்டான். சிலா லிகிதங்களில் "விஷ மரமாகிய ராஜமல்லன் பிடுங்கப்பட்டு அந்த ஸ்தானத்தில் பரிசுத்தமரமாகிய இரண்டாவது புதுகன் மூன்றுவது கிருஷ்ணனுல் நடப்பட்டான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாவது புதுகன், கி. பி. 891ல் நொளம்பர்களால் கொல்லப்பட்ட ராசேய கங்கனது மகனுக விருக்கவேண்டுமென்றும், மூன்றுவது கிருஷ்ணன் செய்ததெல்லாம் கங்கர்களது சிம்ஹாஸனத்தை இரியப்பன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததைச் சரி செய்து நியாயமான பாத்தியஸ்தனை அரசாளும்படி செய்தான் என்றதே. இந்த இரண்டாவது புதுகனை சிம்ஹாஸன மேற்றியது மூன்றுவது கிருஷ்ணனது அதிசயமான சாமர்த்தியத்தையும் ராஜ தந்திரத்தையும் விளக்குகிறது. இப் புதுகன் கங்கர்களது ராச்சியத்தை அவனது மைத்துனன் மூன்றுவது கிருஷ்ணனிடமிருந்து தனது மனைவியின் ஸ்திரீதனமாகவும், ராச மல்லனைக் கொன்றதற்கு வெகுமதியாகவும் அடைந்ததாக ஏற்படும்படிச்

மகளையும் மணம் செய்து கொடுத்தான். இந்த விமலாதித்தியனும் பின்னர் அரசனுனன். கி. பி. 1002-3ல் ராஜாராஜன், இலங்கை, கொல்லம் முதலானவிடங்களை ஜெயித்துப் பிறகு 1004-வது வருஷத்தில் தக்ஷிணத்தையும் இரண்டாவது முறை படையெடுத்தான். அவன் மகன் ராஜேந்திரன் மேற்கு கங்கர்களது பிரதான நகரமாகிய தலைக்காட்டைப் பிடித்துக்கொண்டான். இவனது கடைசிப்படை யெழுச்சி கி. பி. 1013-4ல். அப்பொழுதுதான் அவன் இறந்தும் போயிருக்கவேண்டும்.

பதினோராம் நூற்றாண்டின் சரித்திரம் சோழர்களுக்கும், மேற்குச் சாளுக்கியர்களுக்கும் நேர்ந்த துவந்துவ யுத்தத்தைப்பற்றிய சரித்திரமே. இதன் விவரம் சேலம் ஜில்லாவுக்கு சம்பந்தப்பட்டதன்று. கங்கபாடி பன் முறைகளில் கைமாறி அதாவது இந்த ஜில்லாவில் சோழர்களது ஆக்ஷிபங்கம் நேரிடாமலிருந்ததாம். பன்னிரண்டாவது நூற்றாண்டில சோழராச்சியம் க்ஷீணித்து கலியாணியும் நாசமடைந்தது. ஆதியில் மேற்குச் சாளுக்கியர்களது சிற்றரசர்களாகவிருந்த ஹாய்ஸால பெல்லாலர்கள் மைசூரில் ஹாஸன் (Hassan) ஜில்லாவில் பேலூரைப் பிரதான நகரமாகக் கொண்டிருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கங்கபாடி சோழநாடாகவிருந்து, தர்மபுரி அதிகைமான் என்றவன் கீழிருந்து வந்தது. ஆனால் சோழ ஆட்சி ஜனங்களுக்குத் திருப்திகரமாகவில்லை. ஆதலால் விஷ்ணுவர்த்தனன் என்றவன் கங்கபாடியைப் படையெடுத்துத் தலைக்காட்டில் சோழ அதிபனை முறியடித்துப் புராதன கங்க ராஜதானி நகராகிய அவ்விடத்தையும் பிடித்துக்கொண்டான். முதலாவது குலோத்துங்கனுக்குப் பிறகு அவனது மகன் விக்கிரம சோழன் ஆண்டான்.

இரண்டாவது ராஜாதிராஜன் காலத்தில் சோழர்கள் இரண்டு பாத்தியஸ்தர்கள் இருதலைமுறைகளாகப் போட்டி போட்டுக்கொண்டு வந்த பாண்டிய சிம்ஹாஸனாதி பத்திய விஷயமான போராட்டத்தில் தலையிட்டுக்கொள்ள நேர்ந்தது. அதில் சோழர்களது அதிகாரமே போய்விடும் போலிருந்தது. ராஜேந்திர சோழன் தனது மரபைச் சேர்ந்த ஒருவனைப் பாண்டிய மன்னனாக ஏற்படுத்தி அவனைச் சோழ பாண்டியன் எனக் கூறினான். பன்னிரண் டாவது நூற்றாண்டின் மத்தியில் இச் சோழபாண்டியன் இறந்துபோகப் பழைய பாண்டிய வமிசத்தினர்கள் ராச் சியாதிபத்தியத்தைப்பற்றிப் போட்டிபோடத் தலைப்பட் டார்கள். சோழநாடு சிங்களர்களால் படையெடுக்கப்பட் டது. மூன்றாவது குலோத்துங்கன் அவர்களைத் துரத்தி விட்டு விக்கிரம பாண்டியன் என்ற ஒருவனை பாண்டிய சிம் ஹாஸனத்தில் ஏற்றினான். பாண்டிய ராச்சியத்தைத் திரும்பவும் ஸ்தாபித்தது சோழர்களது அதிகாரத்தின் ஹானிக்குக் காரணமாயிற்று. பதின்மூன்றாவது நூற்றாண் டில் ஹாய்ஸாலர்களும், பாண்டியர்களும் துவந்துவயுத்தம் செய்யத் தலைப்பட்டார்கள். ஹாய்ஸாலர்களது ஆட்சி காலம் முடிவுபெற்றதும் முகம்மதியர்கள் தலையெடுத்தார் கள். விஜயநகர ராச்சியம் தலையெடுத்து முகம்மதியர் களுக்கு இடம் கொடாமல் கொஞ்சகாலமிருந்து வந்தது. ஆனால் தலைக்கோட்டைச் சண்டையில் அந்த ராச்சியம் சின்னாபின்னமாக, முகம்மதியர்களது ஆட்சி ஓங்கிற்று. இந்த முகம்மதியர்களுக்குள் ராச்சியாதிபத்தியத்தைப் பற்றிப் போட்டி நேர, பிரெஞ்சுக்காரர்கள் ஒருகக்ஷிக்கார ருடனும், இங்கிலீஷ்காரர்கள் இன்னொரு கக்ஷிக்காரருட னும் சேர்ந்து போர்புரிந்தார்கள். பிரெஞ்சுக்காரர்களைத்

தோற்கடித்த பிறகு, இங்கிலீஷ்காரர்கள் மைசூரை ஆண்டு வந்த ஹைதருடனும், அவனுக்குப் பிறகு அவனது மகன் திப்புவுடனும் போர்புரிந்து வெற்றிபெற்று அவருடன் 1791-ம் வருஷம் மார்ச்சு மாதம் 19-ம் தேதி ஏற்பட்ட உடன்படிக்கையின்படி அனேக இடங்களுடன் இந்த சேலம் ஜில்லாவையும் அடைந்து இங்கிலீஷ்காரர்களது ராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டு ஆண்டுவருகிறார்கள்.

# அத்தியாயம் 2

## விசேஷ இடங்கள்.

சேலம் (Salem) :—இவ்வூர் பங்களூர், திரிச்சிராப்பள்ளி, கூடலூர் ரஸ்தாக்கள் சேருமிடத்தில் சேலம் நதியெனப்படும் திருமணிமுத்தாறு நதியோரத்தில் அமைந்திருக்கிறது. இது சுற்றிலும் மலைகள் வாய்ந்துள்ள இடம். வடக்கில் ஐந்துமைல் தூரத்தில் சேர்வாராய மலைகளிருக்கின்றன. இன்னும் அருகில் நாகர மலைகளிருக்கக் காணலாம். தெற்கில் இவ்வூர் ஜெருகுமலைத் தொடரால் தடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கில் கஞ்ச மலையும், கிழக்கில் சேலம் ஆத்தூர் பள்ளத்தாக்கின் குறுக்காக ஓடியிருக்கும் கோடு மலையும் இருக்கக் காணலாம். முக்கியமான ரஸ்தாக்களிலெல்லாம் இருபக்கங்களிலும் நேர்த்தியான மரங்கள் வளர்ந்திருக்கின்றன. ஒருசமயத்தில் இந்த ஊர் 'மலேரியா' என்ற காய்ச்சல் நோயுள்ள இடமாயிருந்தது. பனைமரத்துப் பட்டிநீர்த் தேக்கத்திலிருந்து ஏற்பட்டுள்ள ஜல சௌக்கியத்தினால் காலரா நோய் இவ்வூரிலிருந்து அகற்றப்பட்டதாம். மழை யில்லாத நாட்களில் சுற்றிலும மலைகளிருக்கும் காரணத்தினால் உஷ்ணம் ஜனங்களுக்குச் சகிப்பதற்குக் கஷ்டமாக ஏற்படும். ஆனால் அடிக்கடி இடியுடன் கூடிய மழைபொழிவது வழக்கமாதலால் இவ்வுஷ்ணம் குறைகிறது. பொதுவில் இவ்வூர் தேக ஆரோக்கியம் வாய்ந்ததே.

இவ்வூர் திருமணிமுத்தாறு நதியினால் இரண்டுமுக்கியமான பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சேல்மென்ற பாகம் கிழக்கில் இந்நதியின் இடது கரையிலிருக்கிறது. செவ்வாய்ப்பேட்டையென்ற பாகம் மேற்கில் இந்நதியின்



சேர்வ ராயன் மலை.



கல்ராயன் மலை.

வலது கரையிலிருக்கிறது. இவ்விருபாகங்களுக்கு மிடையில் நதியின் வலது பக்கத்துக் கரையில் சேலத்துக் கோட்டை ஏற்பட்டிருக்கக்காணலாம். இக்கோட்டையின் வடகிழக்கில் அது திரும்புமிடத்திற் கருகில் இந்நதியைக் கடக்க ஒருபால முண்டு. சேலம் நகரத்தின் மத்தியில் இப்பாலம் ஏற்பட்டிருக்கிறது பெங்களூர் பெரிய ரஸ்தா வடகிழக்கிலிருந்து இப்பாலத்திற்கு வருகிறது. இப்பாலத்தின் வடக்கிலிருந்து ஏற்காடு ரஸ்தாபோக, பாலத்திலிருந்து கிழக்குப் பக்கமாக இடது கரையில் சேலம் என்ற பாகத்தின் நடுமத்தியில் செல்லும் கூடலூர் பெரும்பாதை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து தெற்கு நோக்கி இறுதியில் திரிச்சிராப்பள்ளிக்குப் போகும் நாமக்கல் ரஸ்தாபிரிந்து செல்லுகிறது.

கோட்டைதான் இந்நகரத்திய புராதன இருப்பிடம். கிழக்கிலும், தெற்கிலும் இதைத் திருமணிமுத்தாறு சூழ்ந்திருக்கிறது. ஆனால் வடக்கிலும் தெற்கிலும் இது எளிதில் தாக்கக்கூடியதே. ஆதி பாதுகாப்பு ஏற்பாடுகளில் கிழக்குப் பக்கத்திய மதில் சுவர்தான் இப்பொழுதிருக்கிறது. சாதாரணமான மண், குண்டுக்கல், முதலியவைகளால் ஏற்பட்டுள்ள மதிலே ஒழியவேறில்லை. ஆஸ்பத்திரி மதில் சுவரிலிருந்து இதுமூலை அணைக்கட்டெனப்படும். கரையின் இடைவெளிவரை போயிருப்பது தெரியவரும். இம்மூலையில் முன் ஒரு தெப்பக்குளமிருந்தது. அணைக்கட்டினால் இதில் ஜலம் தேங்கிநிற்க இதிலிருந்து கோட்டை அகழிக்கு ஜலம் ஏற்பட்டது. முன் அகழியிருந்தவிடத்தில் இப்பொழுது பாதை ஏற்பட்டுள்ளது. மதில் சுவர்களிலிருந்தவிடத்தில் கட்டடங்கள் ஏற்பட்டிருக்கின்றன, மேற்கு மதில் சுவர் லண்டன் மிஷின் கட்டிடத்தின் மதில் சுவருக்கு இணையாக கிழக்கில் எல்லையாக ஏற்பட்டுள்ள அகன்ற இரு

பக்கங்களிலும் மரங்களுடன் கூடிய பாதைக் கெதிராக மேற்கு மதில் சுவர் ஏற்பட்டிருந்தது. இம் மரச்சாலையே சந்தைகூடுமிடமாக ஏற்பட்டுப் பிறகு இடம் போதாத தாலும், சுகாதார விஷயத்தை அனுசரித்தும் சந்தை செவ்வாப்பேட்டைக்கு மேற்கில் வேறோரிடத்திற்கு மாற்றப்பட்டது. கோட்டையின் பிரதானமான வாசல், வடக்கில் ஏற்பட்டிருந்ததாம். அவ்வட பக்கத்திய சுவரிருந்த அடையாளம் யாதுமே இப்பொழுது காணப்படவில்லை. டவுன் ஹால், காலேஜ் இவைகளின் மதில் சுவர்களுக்குப்பின் பூமியின் மண் கெட்டியாகயிராமல் தளர்ச்சியாகக் காணப்படுவதிலிருந்து இப்பொழுது பால் பிள்ளை ரஸ்தாவெனப்படும் ரஸ்தா போகும் வழியாகத்தான் கோட்டையின் அகழி சென்றிருக்கவேண்டுமென்று நினைக்க இடமேற்படுகிறது. கோட்டைக்குள்ளாகவுள்ள கட்டடங்களில் முக்கியமானவை மகூதி ஒன்றும், சுந்தர ராஜப் பெருமாள் கோவிலுமே. முந்திய கட்டடத்தின் தரை ரஸ்தாவின் மட்டத்திற்கு இரண்டடி தாழ்ந்தும் பிந்திய கட்டடத்தின் தரை நான்கடி தாழ்ந்தும் இருக்கிறது. "மஹால்" என்ற பெயருள்ள கட்டடத்தில் கோட்டைக் கில்லெதார் இஸ்மேல்காணும், திப்புவின் கீழிருந்த ஒரு ரிவினியூ அதிகாரியும் கச்சேரி நடத்திவந்தார்களாம். ஆனல் இக்கில்லேதார் இஸ்மேல்கான் குடியிருந்தவிடம். இப்பொழுது சிறுசிறு கட்டடங்களுடன் கூடியுள்ள மேற்குப் பக்கத்திலிருக்கும் ஒரு உயர்ந்த பகுதியிலேயாம். அருகிலுள்ள ஒரு தென்னந்தோப்பில் ஒரு ஆழமான குளமிருக்கிறது. அதன் கைப் பிடிச்சுவர் தற்காலத்திய வேலையெனக்கூற இடமிராத சிலாக்கியமான வேலைப்பாடுள்ளதாக விருக்கிறது. இந்தத் தோப்பு ஒரு காலத்தில் விஷ்ணு கோயிலின் நந்தவனமாக விருந்ததாம்.

நெசவுத் தொழில் செய்யும் கைக்கோளர்கள் அதிமாக விருப்பது மஜரா அம்மாப்பேட்டை யென ஏற்பட்டுளது.

இட நெருக்கத்தினால் பிராமணர்களில் சிலர் சுகவனேசுவரர் கோவில் என்ற சிவன் கோவிலைச் சுற்றி ஏற்பட்டுள்ள மேட்டுத்தெரு என்ற கிராமத்திற்குக் குடிப் போயிருக்கிறார்கள். நதியின் வலது கரையிலுள்ள இவ்விடத்தில் நல்ல ஜலமும் நல்ல காற்றும் உண்டு.

சேலத்தைப் பார்க்க வருபவர்களது கண்ணுக்கு முதல் முதல் படத்தக்கவைகளில் ஒன்று ஜெருகு மலைச் சிகரம் ஒன்றில் ஏற்பட்டுள்ள நாமம். இத்தென்கலை நாமம் இரண்டு சுண்ணும்பு நாமங்களுக் கிடையில் மஞ்சள் நாமத்துடன் கூடியுள்ளது. ஒவ்வொரு நாமமும் நாற்பதடி நீளம் ஆறடி அகலம் வாய்ந்து வெகு தூரம் வரை தெரியும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நாமமலையினடியில் சந்நியாசி குண்டு என்ற ஒரு பெரிய குண்டுப் பாறை யிருக்கிறது.

வித்தியா விஷயத்தில் இந்த ஜில்லா சென்னை ராஜதானியிலேயே கடைசியானது. 1901, 1911-வது வருஷங்களில் இந்த ஜில்லாவிலுள்ள முகமதியர்கள் இதர ஜில்லாக்களின் முகம்மதியர்களைக்காட்டிலும் வித்தியாபி விர்த்தி வாய்ந்திருந்தார்களெனக் காண்கிறது. கிறிஸ்தவர்கள் இந்த வித்தியாபி விர்த்தியில் முகமதியர்களுக்கும் தாழ்ந்திருந்தார்கள். ஆனால் பெண்கல்வியில் கிறிஸ்தவர்களுக் கேற்பட்டிருந்த ஊக்கம், கிறிஸ்தவர்களுள் படித்தவர்களது சங்கியை அதிகரிக்கச் செய்திருந்தது. இது விஷயத்தில் ஹிந்துகள் மிகவும் பின்னடைந்திருந்தார்கள்.

1907-வது வருஷத்தில், இந்த ஜில்லாவில் லோகல் பண்டார் ஒன்பது உயர்தரக்கலாசாலைகள் (Secondary schools)

வைத்து நடத்திவந்தார்கள். நாமக்கல்லும் திருப்பத்தூரும் இந்த ஜில்லாவினின்றும் எடுப்பட்டுப் போனதுமே மேற் சொன்ன கலாசாலைகளின் சங்கியை மூன்றாக ஏற்பட்டது. அவைகள் சேலம் கல்லூரியைச் சேர்ந்துள்ள உயர்தரக் கலாசாலையும், கிருஷ்ணகிரி, தர்மபுரி, இவ்விடங்களிள்ள எல்லா வகுப்புகளும் ஏற்பட்டிராத உயர்தர கலாசாலை களுமே இப்பொழுது இந்த சேலம் ஜில்லாவில் சேலம் தாலூகா போர்டாரால் பல கீழ்தரக் கலாசாலைகள் (Elementary Schools) வைத்து நடத்தப்பட்டு வரு கின்றன. சங்கரிதுர்க்கம், ஹோசூர், தர்மபுரி இவைகளின் தாலூகா போர்டார்கள் முறையே அநேக கீழ்தரக் கலாசாலைகளை வைத்து நடத்திவருகிறார்கள். சேலம் முனிசி பாலிடியில் சில கீழ்தரக் கலாசாலைகளிருப்பதுடன், முக் கியமான உயர்தரக் கலாசாலை மிஷன் கலாசாலைகள். தவிர இங்கு ஒரு கீழ்தர முனிஸிபல் கல்லூரியுமிருக்கிறது.

இந்த ஊரின் முக்கியமான சிவன் கோயில், மேட்டுத் தெருவிலுள்ளது. இக்கோயில் சுவாமிக்குச் சுகவன ஈசு வரர் என்று பெயர். இது புராதனமான கோயில் என்று பாண்டிய சோழர்களது சிலாலிகிதங்களிலிருந்து ஏற்படு கிறது. அவைகள் ஒன்றில் இக் கடவுள் கிளிவர்ணம் உடை யார் எனக் கூறப்பட்டுளது. இந்த ஜில்லாவின் விசேஷ கோவில்களுள் இதொன்று. மஹா மண்டபத்திற்கும், கோபுரவாசலுக்கும் இடையிலுள்ள பாகத்தில் எண்பது தூண்கள் அடங்கிய மண்டபம் ஒன்று ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது. இந்த மண்டபத்திற்கு வடக்கில் ஒரு ஆழமான கிணறு உண்டு. அதற்கு "அமண்டூக தீர்த்தம்" என்று பெயர். ஆயிரம் தலைகளுடன் கூடிய ஆதிசேஷன் இப் பொழுதும் இங்கு வந்து போவதாக ஜனங்கள் நம்புகிறார்

கள்! அவனது பயத்தினுல்தான் தவளைகள் அங்கிருந்தகன்றுவிட்டனவாம்!! இப்பொழுதும் இக் கிணற்றில் தவளை ஒன்றுவிடப்பட்டால் அது உடல் கறுத்து இறந்து போவதைப் பார்க்கலாமாம்!!!

இந்த ஊரின் முக்கியமான பெருமாள் கோயில் கோட்டையில் ஏற்பட்டிருக்கிறது. கடவுளது பெயர் சுந்தரராஜப் பெருமாள். இவருக்கு அழகிரி சுவாமியென்ற பெயரும் உண்டு. இக் கோவிலில் நல்ல பிராகார சுவர்களும் உண்டு. மத்திய மஹாமண்டபம் மிகப் பெரிதாகவிருப்பதுடன் அறுபத்தாறு தூண்கள் உள்ளதாகவுமிருக்கிறது. வாயிலுக்கெதிரில் பெரிதான ஒரு ஹனுமார் உருவம் கோவிலைப் பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருக்கிறது.

நாமக்கல் (Namakal) :—இவ்வூர் ஒரு பெரிய வெள்ளைக் கட்டிக் குன்றின் அடியில் ஏற்பட்டிருக்கிறது. இக் குன்றின் உச்சியில் ஒரு கோட்டையும் உண்டு. இது கோட்டையென்றும் பேட்டையென்றும் இரண்டு பாகங்களாகப் பிரிவுபட்டிருக்கிறது. இங்குள்ள குன்றிற்கு மேற்குப் பக்கத்திலிருப்பது கோட்டை. கிழக்குப் பக்கத்திலிருப்பது பேட்டை. இவ்வூர் நன்கு அமைக்கப்பட்டுள்ள ஊர் என்றதுடன் இதற்கு விசாலமான வீதிகளும் உண்டு.

தென்மேற்கிலிருந்து இக்கோட்டைக்குப் போவது எளிது. ஏனெனில் அந்தப் பக்கத்தில் பாறைகளில் குறுகலான படிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. வடக்கிலும் திருட்டுவாசல் என்ற மார்க்கமாய் ஏறிச் செல்லவும் முடியும். குன்றின் கீழ்ச் சரிவில் தெற்கிலும் தென்மேற்கிலும்



நாமக்கல் மலை

முதல்வரிசை அரணின் பாழிட மிருக்கிறது. மேலேயுள்ள வாஸ்தவமான கோட்டையின் வெளிச்சுவர்கள் இடிந்து போகாமல் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. மேல் பாகத்து இச்சுவர்களில் ஒரு விசேஷம் காரையை உப யோகித்துக் கற்களைப் பொருந்தவைக்காம லிருப்பது. கற் களின் கனமும், அவைகளை ஒன்றோடொன்று பொருந் தும்படி வேலைசெய்திருப்பதுமே அவைகளை உறுதியாக நிற்கும்படி செய்திருப்பது. மேலே மூன்றடி அகலம் வாய்ந்துள்ள உறுதியான செங்கல் சுவர்கள் ஏற்பட்டிருப் பதில் துப்பாக்கி வைத்துச்சுடத் துவாரங்கள் நாலாபக்கங் களிலும் ஏற்பட்டிருக்கின்றன. சுவரின் உட்பக்கத்தில் துப்பாக்கி சுடுபவர்கள் நின்று சுடத் திண்ணைகள் சுற்றி லும் ஏற்பட்டிருக்கின்றன. கோட்டையைச் சுற்றிலுமுள்ள

பாகங்களில் எங்குமே ஒரு அங்குல இடம்கூடத் துப்பாக்கிக் குறிக்குத் தப்பக்கூடியதாகவிராமல் அவ்வளவு சாமார்த்திய மாய் இக்கோட்டை அமைக்கப்பட்டிருக்கிறது. சுவர்களால் அடைக்கப்பட்டுள்ள பாகம் ஒன்றரை ஏகரா விருக்கலாம் அதில் ஒரு சிறிய கோவிலும் முன் கஜானு இருந்ததாகச் சொல்லப்படும் ஒரு பழைய இடிந்துபோன செங்கல் கட்டடமு மிருக்கின்றன.

இவ்வூரிலுள்ள விஷ்ணு கோவிலுக்கு விசேஷமாய்ப் பேய் பிடித்திருப்பவர்கள் வருவது வழக்கம். பாறையின் பக்கத்தில் அனேகம் புண்ணிய தீர்த்தங்களும் உண்டு. இவைகளுள் பெரியது "கமலாலயம்" என்ற தீர்த்தம். நாமகிரியம்மன் என்ற பெயருடன் விளங்கும் லக்ஷ்மிதேவியாருக்கு விசேஷமான தீர்த்தம் இதுதான். லக்ஷ்மணனை உயிர்ப்பிக்க சஞ்சீவி மூலிகை கொண்டுவரச் சென்ற ஹனுமார் வழியில் தாகசாந்தி செய்துகொள்ள இங்கு தங்கினபொழுது லக்ஷ்மிதேவியார் இங்கு தவம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். அவருடன் பேசிக்கொண்டிருக்கையில அவர் கையிலிருந்த கல் தற்காலத்திய நாமக்கல் பாறையாக மாறிற்றாம்! இச்சம்பவம் உண்மையே என நிரூபிக்க இப்பொழுதும் குளத்திற் சருகில் ஹனுமாரது அடிச்சுவடுகள் காட்டப்படுவ துண்டாம்.

நாமக்கல் குன்றிலுள்ள ரங்கநாதர் கோவில் பாறையைக் குடைந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குகைக் கோவிலில் அடங்கியுள்ளன (1) இரண்டு தூண்களும், மேலே ஏற இரண்டு படிகளுடனும், அடியில் மூன்று அந்தஸ்துகளும் கூடிய ஒரு உயர்ந்த திண்ணை, (2) இரண்டு தூண்களுடன் கூடிய, இத்திண்ணையுடனும் அடியில் விவரிக்கப்போவதுடனும் தொடர்ச்சியாக ஏற்

பட்டுள்ள கூடம், (3) குகையின் கூறை மூடிக்கொண்டு வளைவாக நீண்டு நிற்குமிடத்தின் கீழுள்ள ஒரு சிறிய தாழ்வாரம் முதலியன. கோவில் அதிகாரிகள் வெளித் தூண்களை ஒட்டி ஒரு சுவர் கட்டியிருக்கிறார்கள். இச்சுவரில் மூன்று கதவுக ளிருக்கின்றன. மத்திய யிலுள்ளதுதான் கோவிலுக்குள் சாதாரணமாய்ப் போவதற்கு ஏற்பட்டுள்ள வழி. மற்ற இரு கதவுகளும் வருஷத்திற் கொரு முறை வைகுண்ட ஏகாதசியன்றுதான் திறக்கப்படுவது வழக்கம். இங்குள்ள திண்ணை அல்லது மேடையில்தான் ஸ்ரீரங்கநாதர் பள்ளிகொண்டிருப்பது. அவர் பள்ளி கொண்டிருக்கும் படுக்கை ஆதிசேஷன் என்ற பாம்பின் உடலால் ஏற்பட்டிருப்பதாக நினைக்கிறார்கள். தும்புரு, நாரதர், பதஞ்சலிகளின் உருவம் ஏற்பட்டுள்ள இக்குகையின் மேற்குச் சுவருக்கருகில் கடவுள், நான்கு கந்தர்வர்களுடன், இவரது நாபியிலிருந்து வளர்ந்து மலர்ந்திருக்கும் தாமரைமலரின்கண் பிரம்மா இவர்கள் வீற்றிருக்கக் காணலாம். வடக்குச் சுவரில் கடவுளது பாதத்திற் கருகில், மது கைடவர்களது உருவங்களும், சந்திரனது உருவமும் ஏற்பட்டிருக்கின்றன. தெற்குச் சுவரில் கடவுளது தலைக்கருகில் சூரியனது உருவ மிருக்கிறது. படுக்கையின் அடியில் கடவுளது ஐந்து ஆயுதங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேடைக்கும், தூண்களின் வெளிவரிசைக்கும் இடையிலுள்ள கூடத்தில், தெற்குச் சுவரில் பகவானது திருவிக்கிரம, வாமன அவதாரங்களின் சிலைகளும், ஜாம்பவான், மஹாபலிச் சக்கரவர்த்தி, கந்தர்வர்கள் இவர்களது உருவங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதே மாதிரி வடக்குச் சுவரில் சங்கரநாராயண உருவம் ஏற்பட்டிருக்கிறது. ஸப்த நதிகளும் கூடக் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கும்பலுக் கருகில் பால நரஸிம்மர் இருக்கிறார்.

அதே குன்றில், லக்ஷ்மி நரஸிம்ம சுவாமி கோவிலில் மத்திய ஆலயம் மூன்று அறைகளும், இரண்டு தூண் களும், முன்பு ஒரு திண்ணையும் ஏற்படுத்தப்பட்டுள்ள குகைக் கோவிலே. மத்தியிலுள்ள அறை நான்கு ஸ்தம் பங்களுடன் கூடிய ஒரு உயரமான மேடையின்மேல் ஏற் பட்டிருக்கிறது. இதற் கேற்பட்டுள்ள இரண்டு படிகளும் புராதனமானவை அல்ல. தற்காலத்தில் ஏற்பட்டுள்ளவை. இந்த அறையில் வீராஸன நரஸிம்ம மூர்த்தியின் உருவம் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவத்துடன் ருத்திரன், சூரியன், ஜனகர் இவர்களது உருவங்கள் ஒன்றின் பின் ஒன்றாக இடது பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. வலது பக்கத்தில் சனந்தனன், சந்திரன், பிரம்மா முதலா னோர்களது உருவங்களிருக்கின்றன. சூரிய சந்திரர்கள் சாமரங்கள் வீசிக்கொண்டிருக்க, ஸநக ஸநந்தனர்கள் உலக சமாசாரங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார் கள். ஹிரணியகசிபு நாசம் செய்யப்படுங் காலத்தில் ஏற் பட்டுள்ள கோபத்தை ருத்திரனும் பிரம்மாவும் சாந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். மத்தியிலுள்ள அறைக்கு இடது பக்கத்திலுள்ள முதல் அறையில் தனது மடியில் போட்டுக் கொண்டு, இரு கைகளாலும் ஹிரண்ணிய கசிபுவை நரஸிம்ம மூர்த்தி கிழித்துக்கொண்டிருப்பதைக் காட்டும் உருவம் ஏற்பட்டிருக்கிறது. மஹா விஷ்ணுவின் நான்கு கரங்களில் இரு கரங்களுள் ஒன்று அவ்வசுரனது இடது காலையும் மற்றது வலது கையையும் பிடித்துக் கொண்டிருக்கக் காணலாம். இவ்வரக்கன் பூமியில் கிடந் தால் மரணம் ஏற்படாதிருக்க வரம் பெற்றிருந்த காரணம் பற்றி இவ்வாறு அவனது தேகத்தைக் கிடத்தி விஷ்ணு அவனைக் கொல்ல வேண்டியிருந்தது. நான்காவது கரத்தில் கடவுள் கத்தியும், வில்லும் பிடித்திருக்கிறார்.

மூன்றாவது அறையில் பூதேவியை வலது கையில் தாங்கியுள்ள வாராஹாவதார மூர்த்தியின் உருவம் ஏற்பட்டுளது. அவளது பாதம் இன்னொரு கையில் வைக்கப்பட்டிருக்கிறது. வாராகமூர்த்தியின் தலைக்குமேல், அரக்கனால் கொண்டு போகப்பட்ட நான்கு வேதங்களைக் காட்ட நான்கு தலைகளிருக்கின்றன. அடியில் இடது பக்கத்தில் ஆதிசேஷனும் வலது பக்கத்தில் பூமிதேவியும் கலியுக முடிவில் காணப் படு மெனப்படும். இவ் வாராகா வதார மூர்த்தியின் பாதங்களைப் பார்க்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வளைந்துள்ள வாராகத்தின் வலது கால் கணுக்கால் வரைக்கும் காணப்படுகிறது. நேராகவுள்ள இடது கால் முழங்கால் வரைக்கும் காணப்படுகிறது. இக்குகையின் வடக்குத் தெற்குச் சுவர்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிறை யிருக்கக் காணலாம். தெற்குச் சுவரில் உள்ளதில் வாமனாவதார உருவம் ஏற்பட்டுளது. அதிலுள்ள மத்திய பிம்பம் திருவிக்கிரமனது. கீழே யுள்ளது குடையுடன் கூடிய வாமனன். திருவிக்கிரம பிம்பமும் குடையின் கீழாகவே ஏற்பட்டிருக்கிறது. திருவிக்கிரமனது தூக்கப் பட்டுள்ள பாதம், கூரை வரைக்கும் நீட்டப்பட்டிருக்கும் பாதங்களுடன் தலை கீழாக நிற்கும் பிரம்மாவினால் பூசிக்கப் படுகிறது.

பிரம்மாவுக் கருகில் திருவிக்கிரம ஜெயபேரி அடித்துக் கொண்டிருக்கும் ஜாம்பவனது உருவ முளது. திருவிக்கிரமன் தலைக்கு வலது பக்கத்தில் யூபஸ்தம்பத்தில் கட்டப் பட்டுள்ள யாகக் குதிரையின் தலை காணப்படும். கீழே தீர்த்த பாத்திரத்துடன் கூடிய மஹா பலியும், அவருக்குப் பின் சுகரும் காணப்படுகிறார்கள். அடியில் இடது மூலையில் திருவிக்கிரமனது இடது காலுக் கருகில் மஹாபலி

யைத் தியாகம் கொடாமலிருக்கும்படி செய்த சுக்கிராசாரியாரது தோளின் மீது உட்கார்ந்து அவரைக் கருடாழ்வார் பிடித்துக் கொண்டிருப்பதைக் காட்டும் உருவமும் ஏற்பட்டுளது. வடக்குச் சுவரிலுள்ள இடது பிறையில் வைகுண்ட நாராயணரது உருவம் உளது. ஹிரணியகசிபு சங்காரமாகுமுன் நேர்ந்த சம்பவத்தைக் காட்டும் ஏற்பாடுகள். தேவர்கள் விஷ்ணுவினிடம் அரக்கனது கொடிய துர்ச்செயல்களை எடுத்துக்கூறி அவனை ஹதம் செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறார்கள். சர்ப்பசாயியாகவும், சதுர்புஜங்களுடனும், இரு கரங்களில் சங்கு சக்கராயுதங்கள் தரித்துள்ளவராயும் பகவான் விளங்குகிறார். இவருக்கிடது பக்கத்தில் சூரியனும், கீழே ஈசுவரனும், காலடியில் மார்க்கண்டேயரும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. விஷ்ணுவின் பாதத்திற் கருகில் பூமிதேவி யிருக்கிறாள். வலது பக்கத்தில் கீழே சதுர்முகப் பிரம்மாவுடன் சந்திரன் இருக்கிறார். அதன் கீழ் அபயஹஸ்தத்துடன் நரஸிம்ம மூர்த்தி யிருக்கிறார். இவ்வுருவம், அரக்கன் மனிதர்களாலும், மிருகங்களாலும் சாகாத வரம் பெற்றவனே யென்று கூறிய தேவர்கள் முதலானோர்களுக்குத் தான் எடுக்கப்போகும் உருவம் எத்தகையதென்று காட்ட எடுத்த தெனக் கருதப்பட்டுளது. இச்சிலைகளைப் பற்றி இவ்வளவு கூறியிருப்பதற்குக் காரணம அவைகள் வெகு அழகாய் அமைந்திருப்பது பற்றியே.

திருச்செங்கோடு (Tiruchengode) :—இவ்வூர் சங்கிரிதுர்க்கம் ரயில் ஸ்டேஷனிலிருந்து ஐந்து மைல் தூரத்திலும், சங்கிரி மலையிலிருந்து எட்டு மைல் தூரத்திலும் உள்ளது. இங்கிருந்து முக்கியமான வர்த்தக ஸ்தலங்களுக்கெல்லாம் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வூருக்குப்

பெயர் வந்தது சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 1900 அடி உயரம் வாய்ந்துள்ள உன்னதமான குன்றிலிருந்தே.



திருச்செங்கோடு

இக்குன்று ஏற்பட்டதற்கே ஒரு புராணக் கதை உளது. ஒரு காலத்தில் வாயுவுக்கும் ஆதிசேஷனுக்கும் தங்களுள் யார் பலசாலி என்றதைப் பற்றிச் சண்டை நேர்ந்தது ஆதிசேஷன் ஹிமயகிரியைச் சுற்றிக்கொள்ள வாயு அவனை அதிலிருந்தும் இழுத்து விடுவதென ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பொழுது ஏற்பட்ட பயங்கரமான புயல் காற்றினால் தேவர்கள் ஆதிசேஷனைத் தோற்றுவிட்டதாக ஒத்துக்கொண்டு விடும்படி கேட்டுக் கொண்டார்கள். அவன் தனது படத்தைக் கொஞ்சம் தூக்க அதனால் அதிகமாக

அடிக்கத் தலைப்பட்ட காற்றினால் ஹிமயகிரியின் சிகரங்களுள் ஒன்று பெயர்க்கப்பட்டுப் போனதுடன் ஆதிசேஷனது படமும் கிழிந்து போகும்படி செய்யப்பட்டது. ரத்தத்துடன்கூடிய அச்சிகரமும் அடித்துக் கொண்டுபோய்த் திருச்செங்கோட்டில் வீழ்த்தப்பட்டது.

இக்குன்றிற்கு நாககிரி அல்லது ஸர்ப்பகிரி என்ற பெயரும் உண்டு. காமதேனு சிவனிட மிருந்து ஐந்து சிகரங்களைப் பெற்று அவைகளைக் கஞ்சமலை யென்றும், சங்கிகிரி யென்றும், புஷ்பகிரி யென்றும், ஊராச்சிக்கோட்டைகிரி யென்றும், நாககிரி அல்லது திருச்செங்கோடென்றும் ஸ்தாபனம் செய்தனளாம். திருச்செங்கோட்டிற்கும் ரயில் ஸ்டேஷனுக்கு மிடையிலுள்ள புஷ்பகிரிக்கு மோரூர் கிரி என்ற பெயரு முண்டு. ஊராச்சிக்கோட்டைகிரி பவானிக் கருகி லுள்ளது. இந்த நாககிரி சிவ சக்திகளது சேர்க்கையைக் காட்டுகிறது. ஆதிசேஷனது ரத்தத்துடன் சேர்ந்துள்ள சிகரமும், காமதேனுவினால் ஸ்தாபிக்கப்பட்ட சிகரமும் ஒன்று கூடி ஏற்பட்டதாகச் சொல்லப்படும் இக்குன்றின் உச்சியில் அர்த்தநாரீசுவரரது கோவில் ஏற்பட்டுளது.

அர்த்தநாரீசுவரரது கோவிலுக்குப் போக ஆயிரத்திருநூறு படிகள் ஏற்பட்டிருக்கின்றன. போகும் மார்க்கத்தில் அனேகம் மண்டபங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுள் "தைலி மண்டபம்" என்ற மண்டபத்திற்கு மேற்கில் ஒரு நந்திவிக்கிரக மிருக்கிறது. பக்தர்கள் இதன்மீது வெண்ணெய் கொண்டுவந்து பூசுவார்கள். இத்திருச்செங்கோடு மலையே ஒரு சிவலிங்கமெனக் கருதப்படுவதால் இந்நந்தி இம்மலையையே பார்த்துக்கொண்டிருக்கிறது. பக்கத்திலுள்ள பாறையின் மீது அறுப தடி நீள

முள்ள ஒரு பெரிய ஐந்து தலைப்பாம்பு ஏற்பட்டுள்ளது. இப் பாம்புக்குக் கொங்கு நாட்டு மலைக்குடியானவர்கள் பொங்கல் போட்டுக் கோழி பலியிடுதல் உண்டு. அப்படிச் செய்தால் அவர்களுக்கு ஒரு விதப் பாம்பும் யாதொரு தீங்கும் இழை யாதாம்! இத்தைலி மண்டபத்தைத் தவிர்த்து 'சிங்க மண்ட பம்' என்ற மண்டபமும் இக்குன்றில் இருக்கிறது. சிங்க மண்டபத்தில் சிங்கம், குதிரை இவைகளின் உருவங்கள் நன்கு ஏற்பட்டிருப்பதுடன் அதை ஆதியில் கட்டி வைத்த வர்களதெனக் கருதப்பட்டு வரும் சில மானிட உருவங் களும் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கும் அடுத்த மண்ட பத்திற்கு மிடையில் "சத்தியப் படிகள்" என்ற அறுபது படிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்களுள் கொடுக்கல், வாங்கல் தகரார் ஏற்பட்டால் இப்படியி லிருந்து சத்தியம் செய்து அத்தகரார்களை நீக்கிக்கொள்வது வழக்கம்! இப் படிகளில் செய்யப்பட்ட சத்தியத்தை ஹைகோர்டாரும் அங்கீகாரம் செய்து கொள்கிறார்கள்! இப்படிகளுக்குக் கிழக்கிலுள்ள ஒரு பாறையில் சோழர்களது சிலா லிகிதங் கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த அறுபது படிகளையும் கடந்து ஏழடி ஆரத்தில் "அறுபதாம் படி மண்டபம்" என்ற மண்டப மிருக்கிறது. "பாண்டவ குன்று" ஏற் பட்டிருக்கும் பாறையின் அடியில் இம்மண்டபம் இருக் கிறது. முந்திய நாட்களில் இப்பாறையின் மீது ஒரு கோட்டை இருந்ததாம். அதன் வடக்கு வாசல் பக்கத்தி லுள்ள பைரவ தீர்த்தத்தின் ஓரத்தில் ஏற்பட்டிருந்ததாம். கோட்டை வாசலென்ற பெயர் இந்த இடத்திற்கு இன்ன மும் ஏற்பட்டுளது. கோபுரவாசல் மண்டபம் கி. பி. 1654-ம் வருஷத்தில் சீயாலகட்டி முதலியாரால் ஆரம்பிக்கப் பட்டு, ராசிபுரம் விழியகுலத்தாரால் முடிக்கப்பட்டதாம்.

இதற்கப்பால் தான் அர்த்தநாரீசுவரரது கோவில் வாசல் ஏற்பட்டிருக்கிறது. இக்கோவில் பிராகாரத்தின் வெளிச்சுவர் கிழமேல் 260 அடியும் தென்வடலில் 198 அடியும் கூடியுள்ளது. கோவில் கீழ்மேலில் 170 அடியும், தென்வடலில் 95 அடியும் வாய்ந்துள்ளது. முஹாமண்டபம் சங்கிரி துர்க்கத்திய கவர்னர் சாம்போஜி என்றவரால் ஆரம்பித்துக் கட்டப்பட்டுப் பிறகு கி. பி. 1684-வது வருஷத்தில் தாரமங்கலம் சியாளகட்டி முதலியாரால் முடிவுசெய்யப்பட்டதாம். இக்கோவில் மேற்கே பார்த்துளது. இக்கோவிலின் நந்தி வேலூர் விருபாக்ஷராயரது காலத்தில் தஞ்சாவூர் ஜில்லா திருவாவடுதுறை சந்நியாசி ஒருவர் பாடியதின்மேல் உயிர்பெற்றுக் கட்லேயைத்தின்றதாம்!

நிருத்த மண்டபம் என்ற மண்டபம் கி. பி. 1599-வது வருஷத்தில் மோரூர் அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் என்றவனுல் கட்டிவைகசுப்பட்டது. இம்மண்டப மத்தியிலுள்ள ஊஞ்சல் மேடையிலுள்ள விமானத்தில் வில்வ தளங்களை அதினின்றும் விழச்செய்யும் பண்டைய காலத்திய யந்திரங்களுள்ளன. அது தற்காலம் உபயோகத்தி லில்லை.

அர்த்தநாரீசுவரர் கோவிலுக்குத் தெற்கிலுள்ள விக்கிநேசுவர மண்டபமும், தாண்டவபத்திரை விலாசம் என்றதும் கி. பி. 1627-ல் குமாரசாமிக் காங்கேயன் என்றவனுல் கட்டி வைக்கப்பட்டனவாம். இந்த ஜில்லாவில் 1823-ல் கலெக்டர் ஸ்தானம் வகித்தமிஸ்டர் டேவிஸ் துரையின் (Mr. W. D. Davis) உருவம் தொப்பியுட னிருந்து வருகிறது. இவர் இம்மண்டபத்தை அவரது காலத்தில் புதுப்பித்தாராம். இந்த டேவிஸ் துரை உருவமுள்ள தூணின் கிழக்கிலுள்ள தூணில் காங்கேயன் குமாரசுவாமியி னுடையவும் அவரது நான்கு பத்தினிமார்களுடைய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இக்கோவிலின் வடபாகத்தில் சுப்பிரமணிய சுவாமி கோவில் ஒன்றிருக்கிறது. அக்கோவிலிலும் ஒரு நேர்த்தியான மஹாமண்டபம் உண்டு. இதில் ஸ்காந்தபுராண வைபவங்களைக் காட்ட மேற் கூறையில் சிலா வரிசைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்த ஸந்நிதியிலுள்ள துவாரபாலகர்களது உருவங்கள் வெகு நேர்த்தியாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள விமானம் ஏற்படுத்தியது தாரமங்கலம் சியாலகட்டி முதலியார் என்றவர்.

இம்மலையின் சிகரங்களுள் உன்னதமான சிகரத்தில் பாண்டீசுவரர் கோவில் ஏற்பட்டிருக்கிறது. இது பாண்டிய மன்னர்கள் இவ்விடம் வந்ததின் ஞாபகத்தைக் காட்டுகிறது. இக்கோவிலுக் கருகில்தான் 'மலடிக்கல்' இருக்கிறது. குழந்தையில்லாத ஸ்திரீ இப்பாறையைச் சுற்றி மும்முறை நகர்ந்து வந்தால் அவளுக்குக் குழந்தை பிறக்குமாம்! அப்படி வருவது மிகவும் அபாயகரமானதென்று தெரிந்து அபாயத்தைக் குறைக்குமாறு அரை வட்டமான மதில் இப்பொழுது ஏற்பட்டுளது.

ஊரின் மத்தியில் அர்த்தநாரீசுவரரது கோவிலுக்கிரண்டாவதான கைலாஸநாதர் கோவி லிருக்கிறது.

ஊருக்கருகில் பரமத்தி ரஸ்தாவில் மலைக் காவலர் கோவில் என்ற கோவில் ஏற்பட்டிருக்கிறது. பிசாசு குடியேறியுள்ள வீட்டுக்காரர்களுக்கு இக்கோவில் பூசாரி எழுதிய பனை ஓலைத் துண்டுகள் கொடுப்பான். அவைகளிலிருந்து அர்த்த நாரீசுவரரது கட்டளையின்படி பிசாசுகள் ஓடிவிடுமாம்! இத்துண்டு ஓலையை கூரையின் ஒரு மூலையிலும், விபூதியை இரண்டு மூலைகளிலும் வைத்துவிட்டால் பாக்கியுள்ள நான்காவது மூலையின் வழியாகப் பிசாசுகள் ஓடிவிடுமாம்!

தர்மபுரி (Dharmapuri) :—இது சென்னை கள்ளிக் கோட்டை ரஸ்தாவில் மொரப்பூர்—ஹோசூர் சிறிய இருப் புப் பாதையில் 178-வது மைலில் இருக்கிறது. ஊரின் முக்கியமான பாகம் முந்திய விருபாக்ஷிபுரம், வெள்ளைக் கவுண்டன்பாளையம் இந்த கிராமங்கள் அடங்கியுள்ளன.

கிருஷ்ணகிரி திருப்பத்தூர் ரஸ்தாக்கள் சேருமிடத்திற் கருகில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் சந்தை கூடும். தானி யங்கள், நல்லெண்ணெய், தோல் முதலியவைகள் வியாபார மாகும்.

தர்மபுரிக் கோட்டை ஊருக்கு வடக்கிலும் மொரப் பூர் காவேரிப்பட்டணம் ரஸ்தாக்களுக்கிடையில் சந்தைக்கு வடக்கிலும், டைக்ஸ்பேட்டை யென்ற மஜராவுக் கப்புறமு மிருக்கிறது. கொடும் பஞ்சம் நேர்ந்தபொழுது இதன் சுவர்கள் இடித்துவிடப்பட்டன. அது இருந்த விடமே இப்பொழுது தெரியாது.

இவ்வூரின் சிவாலயம் மல்லிகார்ஜுன மூர்த்தியினது ஆலயம். இது அமைக்கப்பட்டிருக்கும் மாதிரி பல்லவர் ஆளுகை கி.பி. எட்டாவது ஒன்பதாவது நூற்றுண்டுகளின் அமைப்பை ஒத்திருக்கிறது.

பரவாசுதேவ மூர்த்தியின் ஆலயமெனப்படும் விஷ்ணு ஆலயம் சிவன் கோவிலுக்குப் பின்புற மிருக்கிறது இது சிவன் கோவிலைவிடச் சிறியது. இக்கோவில் மிகவும் சிதில மான நிலைமையி லிருக்கிறது. ஒரு காலத்தில் ஒரு கிறிஸ் தவ முனிசீப் பல் துலக்காமல் இக்கோவிலுக்குட் சென்று விக்கிரகத்தைத் தொட்டுவிட்ட காரணம் பற்றி அது அழ, அந்த முனிசீப்புக்கு அபராதம் விதிக்கப்பட்டதாம். இக் கோவில்களுக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு செல்லியம்மன் கோவி லிருக்கிறது. ரஸ்தாவின் பக்கத்தில் ராமக்கா, லக்ஷ்

மணக்கா என்றவர்களது உருவங்கள் ஒரு தட்டையான பாறையில் செதுக்கிவைக்கப்பட் டிருக்கின்றன.

இந்த தர்மபுரி என்ற ஊர் தமிழ் நூல்களில் தகடூர் என்று கூறப்பட்டுளது. ஔவையார் காலத்திய அதியமான், நெடுமான் அஞ்சி, அவனது மகன் பொகுட்டெழினி இவர்களது பிரதான நகரமாக இருந்ததாம். அக்காலத்தை கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகக் கூறியுளர். நெடுமான் அஞ்சி, சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை என்றவனுல் தோற்கடிக்கப் பட்டது மன்றித் தகடூரும் முற்றுகைபோட்டுத் தாக்கப்பட்டது சரித்திர விஷயம். நெடுமான் அஞ்சியின் மகன் எழினி என்றவனும் அவனுடன் போர் புரிந்துவந்த அதிகாரிகளும் மிக்க சௌரியத்துடன் போர் புரிந்து ரணகளத்தில் உயிர் துறந்தனராம்.

தர்மபுரியைப் பற்றிய புராதன விவரம் ஏற்பட்டுளது கி. பி. ஒன்பது பத்து நூற்றுண்டுகளில். மஹேந்திராதிராஜனின் கீழ் நொளம்ப பல்லவர்கள் திடமென்று பிரபலமானதும். மஹேந்திராதி ராஜனின் தகப்பன் நொளம்பபாடிராஜன் மேற்கு கங்க மன்னன் ராஜ மல்லனது மகள் ஜெயபீ என்றவளை மணந்துகொண்டிருந்தனும். இச்சம்பந்தம் பாணர்களை பாராமஹாலிலிருந்து துரத்திவிட மஹேந்திரனுக்கு அனுகூலமாக ஏற்பட்டது. கோட்டையிலுள்ள மாரியம்மன் கோவிலிலும், மல்லிகார்ஜுனாது கோவில் மண்டபத்துத் தூணிலும் மஹேந்திரனது விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தூணின் அடியில் மஹேந்திரனது மகன் ஐயப்ப தேவனது விகிதங்களுமிருக்கக் காணலாம். விருபாக்ஷபுரத்தில் கி. பி. 931-வது வருஷத்திய, அன்னிகனது மகன் இருளனது விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அதமன்கோட்டை லிகிதங்களிலும் மஹேந்திரனது சம்பந்தம் ஏற்படுகிறது.

நொளம்பபாடி தகடூர்களின் ஆட்சி நான்கு தலைமுறைகள் இருந் திருக்கிறது. அவை (1) மஹேந்திரன் காலம், (2) மஹேந்திரன் மகன் ஐயப்பதேவன் காலம், (3) ஐயப்பதேவன் மகன் அன்னிகன் காலம், (4) அன்னிகன் மகன் இருளன் காலமும். நொளம்பர்களது கடைசி அரசன் அன்னிகனது சகோதரன் திலீபரசன். இந்த நொளம்ப மன்னர்களின் ஆக்ஷியில் சைவ மதமும், ஜெயின மதமும் யாதொரு பாரபக்ஷமுமின்றி வளர்த்து வந்ததாம். தர்மபுரியைச் சுற்றி ஹாய்ஸால ஆட்சி ஏற்பட்டிருந்த விஷயம் அதமன்கோட்டை சிலாலிகிதங்க ளிலிருந்து ஏற்படுகிறது. முதலாவது விஜயநகர வம்ச ஆட்சியை ஸ்திரப்படுத்த கடகத்தூரில் இரண்டாவது தேவராயனது கி. பி. 1430—1440-வது வருஷங்களின் லிகிதங்களும், கி. பி. 1476-வது வருஷத்திய மல்லிகார்ஜுன லிகிதம் இருக்கின்றன.

ஆத்தூர் (Attur):—சேலம், கூடலூர் ரஸ்தாவில் சேலத்திற்குக் கிழக்கில் முப்பத்திரண்டு மைல் தூரத்தில் வஸிஷ்ட நதியின்மீது அமைந்துள்ளது. ஆத்தூர் (ஆற்றூர்) என்னும் பதத்திற்கு நதிக் கரையிலுள்ள ஊர் என்று பொருள். பண்டைக் காலத்தில் இவ்வூருக்கு "ஆனந்தகிரி" என்ற பெயர் வழங்கி வந்ததாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இதற்கு இவ்விரண்டு பெயர்களையும் கூட்டி ஆத்தூர்ஆனந்தகிரி யென்று பெயரிட்டு அழைத்து வருகிறார்களாம்.

வஸிஷ்ட நதியினால் இவ்வூர் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நதிக்குத் தெற்கிலுள்ள கீழ்ப் பாகத

திற்குப் புதுப்பேட்டை என்ற பெயர். மேற்கு பாகம்தான் ஆத்தூர். நதிக்கு வடக்கில் கோட்டையும், முல்லுவாடி மஜராவு மிருக்கின்றன. ஆத்தூருக்கிரண்டு மைல் மேற்கில் சேலம் ரஸ்தாவில் நரசிங்கபுரம் கிராமம் இருக்கிறது.

இவ்வூரிலுள்ள கோட்டை சதுரமாக ஏற்பட்டுள்ளது. பக்கங்களிலும், மூலைகளிலும் முற்றுகை முஸ்தீப்புக்களும் கொத்தளங்களும் வாய்ந்துள்ளது. இதில் மிக்க உயரமாக உள்ள பாகம் தெற்குப் பக்கத்து மத்தியில் கொடி ஸ்தம்பம் நாட்டப்பட்டுள்ள பாகம். கீழண்டைக் கோட்டைச் சரிவு களில் மரங்கள் அடர்ந்திருக்கின்றன. தெற்குப் பக்கம் நதியினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் பிரவாக காலத்தில் இதில் இருப தடி ஜலம் ஓடும். மற்றப் பக்கங் களைக் காக்க அகழிகள் ஏற்பட்டிருக்கின்றன. சுவர்கள் உறுதியாகக் கற்களும் சுண்ணும்பும் கொண்டு கட்டப்பட் டிருப்பதுடன் உள் பக்கத்தில் வெடிகுண்டினால் அபாயம் ஏற்படமுடியாத மூன்று பெரிய அறைகளும் ஒரு சிறு அறையும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இங்கு முன் இரண்டு விடுதிக ளிருந்தனவாம். அவைகளுள் பெரிதில் ராணுவ மிருந்த பொழுது அவைகளின் உத்தியோகஸ்தர் கள் இருந்து வந்தார்களாம். சிறியதில் சேனைத் தலைவன் வசித்து வந்தனனும். வளைந்த கூரையுடன் கூடிய இங் குள்ள ஒரு அறையில் கட்டிமுதலியார் தனது கச்சேரியை நடத்தி வந்ததாகவும், இன்னொரு கட்டிடத்தில் அவாது அந்தப்புரம் முதலியன இருந்ததாகவும் தெரியவருகிறது.

இந்த ஆத்தூர் கோட்டையைக் கட்டி முடித்தது கட்டி முதலியார்களுள் ஒருவராம். ஒரு நாள் அவர் வேட்டை யாடுகையில் ஒரு புதரி லிருந் தெழுந்தோடின முயலைக்கண்டு, அப்புதரை யணுகிப் பார்க்க அங்கு ஒரு

இரும்புச்சால் புதைக்கப்பட்டிருக்கக் கண்டதாவும், அதை வெட்டி யெடுத்த பிறகு அவ்விடத்தைப் பரிசோதிக்க மொத்தத்தில் ஏழு சால்கள் அகப்பட்டதுடன் அவை ஒவ்வொன்றிலும் தங்க நாணயங்கள் நிரம்பி யிருந்ததாகவும், அப்பொருளை உபயோகித்துத்தான் இக்கோட்டையைக் கட்டி முடித்தனராம். இந்த சால்களில் ஒன்று இப்பொழுதும் விஷ்ணுகோவிலில் வைத்திருக்கக் காணலாம்.

1689-வது வருஷத்தில் ஆத்தூர், மைசூர் சிக்கதேவ ராஜரது ஸ்வாதீனப்பட்டுப் பிறகு 1714-வது வருஷத்தில் ஒத்தாப்பூர் சாசனம் ஏற்பட்ட காலத்தில் மைசூர் ராச்சியத்தின் பாகமாக இருந்திருக்கவேண்டும் ஆனால் இது ஒரு ராணுவ ஸ்தலமாக இல்லாமல் மாறியது 1824-வது வருஷத்திற்கு முந்தியே யென்று தெரிகிறது.

ஏற்காடு (Yercaud) :—இது பீடபூமியின் தெற்குப் பாகத்தில் சமுத்திர மட்டத்திற்குச் சராசரி 4500 அடி உயரத்தில் இருக்கிறது. இவ்வூர் ஏற்பட்டிருக்கும் சேர்வராய மலையில் இவ்விடத்தைக் காட்டிலும் பல விதங்களிற் சிறந்த இடங்களிருப்பினும் இது மேன்மை பெற்று நிற்பதற்குக் காரணம் சேலத்திற் கருகி லிருப்பதே போதும். சேர்வராய மலையின் மற்ற இடங்கள் பரிசோதிக்கப்பட்டு ஏற்காட்டைவிடத் தேஹ ஆரோக்கியத்திற்கும், சீதோஷ்ண நிலைமையிலும் சிறந்த வேறிடங்கள் தெரிவதற்கு முன்னமே ஏற்காட்டில் வீடுகள் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த ஏற்காட்டில் முதல் முதல் வீடு கட்டியவர் ரெவரெண்ட். ஜே. எம். லெக்லர் (Rev. J. M. Lechler) என்ற பாதிரியார் அவர். 1841-வது வருஷத்தில் அப்பொழுது சப்கலெக்டராக விருந்த பிரெட் (Mr. Brett) என்பவரோடு இவ்விடம் வந்தவர். இப்பொழுது பேயர்

லாண்ஸ் ஹோட்டல் (Fair Lawns Hotel) என்று அழைக்கப்படும் கட்டடத்தைக் கட்டி முடித்தார். இந்த துரை, வீடுகள், பங்களாக்கள் முதலியன கட்டச் சிறந்த மனைகள். இடங்கள் முதலியன தெரிந்தெடுப்பதில் சமர்த்தராம், இக்கட்டடம் கட்டி முடிவானதும் தற்காலத்திய களஞ்சியமெனச் சொல்லப்படும் கட்டடமும் ஏற்பா டாயிற்று. இது இரண்டு அடுக்குள்ள கட்டடம். சிப்பாய்க் கலகம் வடக்கே ஏற்பட்ட பொழுது, சேலத்திலும் அக்கலகம் ஏற்படுங்கால் ஐரோப்பியர்கள் உபயோகப்படுத்திக் கொள்ள இது தெரிந்தெடுக்கப் பட்டிருந்த இடம். பூமியின் கீழ் அறை தோண்டி அதில் ஆறு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்கள் சேகரித்து வைத்துக்கொண்டிருந்தார்களாம். முற்றுகையை எதிர் பார்த்துச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து வைத்துக் கொண்டிருந்தார்களாம்.

ஏற்காட்டிற்கு வடக்கில் புல் அடர்ந்த மைதானம் ஒன்றுளது. அது அழகிய ஏரி என்றழைக்கப்படும் சுனையின் கரையில் ஏற்பட்டுளது. இச்சுனையிலிருந்து தான் இவ்வூரின் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஏற்காடென்னும் பதத்திற்கு, ஏரியின் கரையிலுள்ள காடென்ற அர்த்தம் பொருந்தும். ஏரிக்கு வடக்கில் புண்ணியமான தெனக் கருதப்படும் சோலை ஒன்றுளது. அதில் இரண்டு அழகிய மலையாளிக் கோவில்கள் இருக்கின்றன. இவைகளுக்குக் கொஞ்சம் மேற்கில் தான் வாரவாரத்திய சந்தை கூடுகிறது. இந்த ஏரிக்கு ஜலம் ஒரு சிற்றாறிலிருந்து வருகிறது. ஏற்காடு அழகிய இடமில்லாவிட்டாலும், அங்கிருந்து இரண்டொரு மைல்கள் சென்ற பின்தோன்றும் காட்சி அற்புதமானது. சேர்வாராயமலையின்

அழகை வர்ணிக்க முடியாதெனக் கூறப்பட்டிருக்கிறது. கோவில் சிகரம் (Pagoda Point) என்னு மிடத்திலிருந்து பார்த்தால்மிக அழகான காட்சியாயிருக்கும். தென்னண்டி மலைத்தொடரின் ஓரம், கிழக்கில் கல்ராயன் மலை, பின் பக்கம் கொல்லிமலை, பச்சைமலை இவைகளை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும் போதி மலை, ஜெருகு மலை முதலியன யாவும் இங்கிருந்து பார்க்கத் தெரியும். மப்பு மந்தார மில்லாத நாளில் பழனி, ஆனைமலை, நீலகிரி முதலிய மலைகளும் இங்கிருந்து தெரியும். வெள்ளாளக்கடை ரஸ்தா வளைந்து செல்லுமிடத்திலிருந்து பார்த்தால் அழகிய வாணியர் பள்ளத்தாக்கு முதலியவைகளை நன்கு பார்க்கலாம் ஏற்காட்டிலிருந்து நாகலூருக்குப் போகும் ரஸ்தாவிலிருந்து அனேக அழகிய காட்சிகளைப் பார்க்கலாம்.

இந்த ஏற்காடு தேக ஆரோக்கியம் வாய்ந்த இடமென்ற காரணம்பற்றி அனேகம் பாதிரிமார்கள் முதலானோர் இதற்கருகில் கோவில்களும், பங்களாக்களும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரியினது சீதோஷ்ண நிலைமை தேஹ ஆரோக்கியத்திற்குச் சிறந்த தென்பதைப்பற்றித் தெரியும் முன்னமே இந்த ஜில்லாவின் அதிகாரிகளுக்கு இச்சேர்வராய மலையைப்பற்றி நன்கு தெரிந்திருந்தது. இவைகளுக்கு முதல் முதல் போக்கு வரவு ஏற்பட முயற்சி எடுத்துக்கொண்டவர் கனம் எம். டி. காக்பர்ண் (M. D. Cockburn) என்றவர். இவர் 1820-வது வருஷம் முதல் 1829-வது வருஷம் வரையில் சேலம் ஜில்லா கலெக்டராக இருந்தபொழுதுதான் அம்முயற்சி எடுத்துக்கொண்டது. இவர்தான் காப்பித் தோட்டங்கள் ஏறபட முதல் முதல் முயற்சி செய்தார். காப்பிச் செடிகள் பயிராகுமாவென்று பரிசோதனை செய்யத் தெரிந்தெடுத்தவிடம் மே

லே களஞ்சியக் கட்டடம் (Grange) என்ற விடத்திற்குச் சேர்ந்த நிலங்களிலாம். 1823-வது வருஷத்தில் சேலம் ஸிவில் ஸர்ஜன் சேர்வராயமலை தேக ஆரோக்கியம் வாய்ந்துள்ள விடமாகக் கருதப்பட்டு அநிக ஜனங்கள் போய் வருவதைத் தெரிவிக்க, ஸர். தாமஸ் மன்ரோ (Sir Thomas Munro) என்ற அக்காலத்திய சென்னை கவர்னர் சேர்வராயமலையைப் பரிசோதனை செய்யுமாறு உத்திரவளித்தார். அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் இங்கிலாந்து (Mr. England) என்றவர் சோதனை செய்து 1824-வது வருஷத்தில் மல்லாபுரத்திலிருந்து மலைப்பாதை ஏற்படுத்தலாமென அறிக்கை செய்தார். ஆயினும் இந்த உத்தியோகஸ்தர் அதே வருஷம் மே மாதத்தில் மலைசுரம் கண்டு இறந்துபோக அவருக்குப் பின் வந்தவர், இக்குன்று தேஹ ஆரோக்கியம் வாய்ந்ததல்லவென்ற தனது அபிப்பிராயத்தை சர்க்காருக்குத் தெரிவித்தார். இதனால் இதன் தேக ஆரோக்கிய மகிமையைப்பற்றிய நம்பிக்கை ஜனங்களுள் குறைந்ததெனினும், சேலத்திலிருந்து பல ஜனங்கள் தேக ஆரோக்கியத்திற்காக இங்குவந்து போவது மாத்திரம் நிற்கவில்லை. தவிர இதன் மண் காப்பிச்செடி பயிர் செய்யச் சிறந்ததென்று கண்டதும் ஜனங்களது வரவை அதிகரிக்கச் செய்தது. பிறகு காலக்கிரமத்தில் இவ்விடம் தேஹ ஆரோக்கியத்திற்கு எடுத்ததெனத் நிர்ணயிக்கப் பட்டது.

---

The Central Co-operative Printing Works, Ltd., Madras.